Find us on facebook/tamilmirror | Follow us on tamilmirror | epaper/tamilmirror.lk

# தமிழ் Mirror

www.tamilmirror.lk

WEDNESDAY, FEBRUARY 19 2025

புதன்கிழமை 19, பெப்ரவரி 2025 | ஒளி: 10 கதிர் 162 | பக்கம்:06 | நகரப்பதிப்பு★ | FREE

சமாதான யுகத்துக்கான மற்றுமொரு

# “வாய்ப்பு”



**தவறவிடாதீர்கள் என்கிறார் சிறிதரன்**

**சண்டையே இல்லாத போது ஒதுக்கியதை எதிர்க்கின்றோம்**

**11 சதவீதமான காணி இராணுவ வசம் உள்ளது**

முன்னாள் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவுக்கு தனது ஆட்சிக் காலத்தில் சிங்கள மக்களின் எதிர்ப்பு இன்றி அதிகாரப் பகிர்வுடன் கூடிய சமஷ்டியை வழங்குவதற்கான வாய்ப்பு இருந்தது என தெரிவித்துள்ள இலங்கைத் தமிழரசுக் கட்சி பாராளுமன்ற உறுப்பினர் எஸ்.சிறீதரன், வாய்ப்பொன்று தற்போதைய அரசாங்கத்திற்குக் கிடைத்துள்ளது இந்த வாய்ப்பை தவறவிடாது சமாதான யுகத்தை ஆரம்பிக்க வேண்டும் என்றும் தெரிவித்துள்ளார்.

பாராளுமன்றத்தில் செவ்வாய்க்கிழமை (18) நடைபெற்ற 2025ஆம் ஆண்டுக்கான வரவு - செலவுத் திட்டத்தின் முதல்நாள் விவாதத்தில் உரையாற்றும் போதே சிறீதரன் எம்.பி. இவ்வாறு கூறியுள்ளார்.

அவர் மேலும் உரையாற்றுகையில், 4218.2 பில்லியன் ரூபாய் செலவு இந்த வரவு- செலவுத் திட்டத்தில் ஏற்படும் என்று ஜனாதிபதியினால் செலவு விபரங்கள் சமர்ப்பிக்கப்பட்டுள்ளன.

ஆனால், வரவுக்கான வழியென்ன என்பது தொடர்பில் தெளிவாகக் கூறப்படவில்லை.

தொடர்ச்சி P2



# பாண் விலை குறைந்தது

கோதுமை மாவின் விலை கிலோகிராமுக்கு ரூ.10 குறைக்கப்பட்டதைத் தொடர்ந்து, 450 கிராம் பாணின் விலையை ரூ.10 குறைக்க பேக்கரி உரிமையாளர்கள் முடிவு செய்துள்ளதாக வர்த்தக அமைச்சகம் தெரிவித்துள்ளது.

## 8 மாகாணங்கள் புறக்கணிப்பு

வடக்கு மாகாண அபிவிருத்திக்கு 5,000 மில்லியன் ரூபாவும், முல்லைத்தீவு வட்டுவாகல் பாலம் நிர்மாணிப்புக்கு 1,000 மில்லியன் ரூபாவும் என்ற அடிப்படையில் 6,000 மில்லியன் ரூபாய் ஒதுக்கப்பட்டுள்ளது. ஆனால், ஏனைய மாகாணங்கள் புறக்கணிக்கப்பட்டுள்ளதாக புதிய ஜனநாயக முன்னணியின்எம்.பி. சாமர சம்பத் தசநாயக்க குற்றம்சாட்டினார்.

பாராளுமன்றத்தில் நேற்று செவ்வாய்க்கிழமை(18) இடம் பெற்ற 2025ஆம் ஆண்டுக்கான வரவு- செலவுத் திட்டத்தின் முதல் நாள் விவாதத்தில் உரையாற்றுகையிலேயே இவ்வாறு குற்றம்சாட்டிய

அவர் மேலும் உரையாற்றுகையில்,

ஜனாதிபதி அனுரகுமார திசாநாயக்க வரவு - செலவுத் திட்டத்தின் ஊடாக ஐசிங் பூசிய கேக்கினை முன்வைத்துள்ளார்.

தொடர்ச்சி P2

## வரலாற்றில் கல்விக்காக அதிக தொகையை ஒதுக்கிய பட்ஜெட்

நாட்டில் திங்கட்கிழமை (17) பாராளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்பட்ட 2025ஆம் ஆண்டுக்கான வரவு - செலவுத் திட்டத்தில், வரலாற்றில் முதன்முறையாக கல்விக்கு என்று அதிக தொகை ஒதுக்கப்பட்டுள்ளது.

நாட்டின் கல்வி நிலையை உயர்த்துவதற்காக ஒதுக்கப்பட்ட ஒதுக்கீடுகள் பின்வருமாறு:

* முன்பள்ளி சிறார்களின் போசனையை அதிகரிக்க, காலை உணவு வழங்குவதற்காக ஒரு வேலை உணவுக்கு வழங்கப்படும் 60 ரூபாவினை 100 ரூபாவாக அதிகரிக்க முன்மொழியப்பட்டது. அதற்காக 1,000 மில்லியன் ரூபாவை ஒதுக்க முன்மொழியப் பட்டது.



தொடர்ச்சி P2

## “கோட்டா நினைவில் இருக்கின்றதா?”

அரசியல் வேறு, பொருளாதாரம் வேறு என்பதை ஜனாதிபதி புரிந்து கொள்ள வேண்டும். 2028ஆம் ஆண்டு முதல் வெளிநாட்டு அரசுமுறை கடன்களைச் செலுத்துவதாக ஜனாதிபதி குறிப்பிடுகிறார். அவ்வாறாயின், ஒவ்வொரு ஆண்டும் பொருளாதார வளர்ச்சி 5 சதவீதத்தால் அதிகரிக்கப்பட வேண்டும். ஆனால், 2024ஆம் ஆண்டு காணப்பட்ட பொருளாதார வளர்ச்சி கூட இந்த ஆண்டு கிடைக்குமா என்பது சந்தேகத்துக்குரியது என ஐக்கிய மக்கள் சக்தியின் எம்.பியான ஹர்ஷ டி சில்வா தெரிவித்தார்.

பாராளுமன்றத்தில் நேற்று செவ்வாய்க்கிழமை இடம் பெற்ற 2025ஆம் ஆண்டுக்கான வரவு-செலவுத் திட்டத்தின் முதல் நாள் விவாதத்தை உரையாற்றுகையிலேயே அவர் இவ்வாறு குறிப்பிட்டுள்ளார்.



அவர் தொடர்ந்தும் உரையாற்றுகையில்,

2025ஆம் ஆண்டுக்கான வரவு-செலவு செலவுத் திட்டத்தை ஜனாதிபதி அனுரகுமார திசாநாயக்க முன்வைத்துள்ளார். என்னையும் கிண்டலடித்தார். பரவாயில்லை. அவர் என் நண்பரே, மக்களுக்கு வழங்கிய வாக்குறுதிகளை நிறைவேற்றாமல், நான் கோருவதை ஜனாதிபதியால் வழங்க முடியாது,

பொருளாதார விடயங்கள் தொடர்பில் நாங்கள் முன்வைக்கும் கருத்துக்களுக்கு அரச தரப்பினர் ஒருசிலர் முறையற்ற வகையில் எதிர் கருத்தை வெளியிடுவதனை பார்த்து வெட்கமடைகிறேன். மாத்தளையில் உள்ள ஒருவர் அரசாங்கத்தை விமர்சித்தமைக்காக. அவர் மக்கள் விடுதலை முன்னணியின் ஆதரவாளர்களால் அச்சுறுத்தப்பட்டுள்ளார். கோட்டாபாய ராஜபக்ஷவின் ஆட்சியிலும் இவ்வாறான நிலைமையே காணப்பட்டது.

கோட்டாபாய ராஜபக்ஷவின் அரசாங்கம் தான்தோன்றித்தனமாகச் செயற்பட்டது. பாராளுமன்றத்தில் அனைத்து குழுக்களின் தலைமைத்துவத்தையும். உறுப்புரிமைகளையும் கைப்பற்றியது. இறுதியில் நடந்தது என்ன? நாடும் அந்த அரசியல் கட்சியும் வங்குரோத்து நிலையடைந்தன. இதனை தற்போதைய அரசாங்கமும் நினைவில் வைத்துக் கொள்ள வேண்டியது அவசியம் என்றார்.



இலங்கைக்கான நிதி மீளாய்வு:

## IMF நிறைவேற்று சபை 28இல் கூடுகிறது

இலங்கைக்கான நீடிக்கப்பட்ட நிதி வசதியின் கீழான மூன்றாவது மீளாய்வு தொடர்பில் பரிசீலிப்பதற்காக, சர்வதேச நாணய நிதியத்தின் நிறைவேற்று சபை எதிர்வரும் 28ஆம் திகதி கூடவுள்ளது.

சர்வதேச நாணய நிதியத்தின் நிறைவேற்று சபையின் எதிர்வரும் கூட்டங்கள் தொடர்பான அறிவிப்பில் இந்த விடயம் குறிப்பிடப்பட்டுள்ளது.

நீடிக்கப்பட்ட நிதி வசதி திட்டத்தின் கீழான மூன்றாவது மீளாய்வின் பின்னர் சர்வதேச நாணய நிதியம் இலங்கையுடன் கடந்த நவம்பர் மாதம் 23 ஆம் திகதி பணியாளர்கள் மட்ட இணக்கப்பாட்டை எட்டியுள்ளது.

தொடர்ச்சி P2

## கெஹெலியவுக்கு எதிரான வழக்கு விசாரணை ஒத்திவைப்பு

முன்னாள் சுகாதார அமைச்சர் கெஹலிய ரம்புக்வெல்லக்கு எதிராக இலஞ்ச ஊழல் ஆணைக்குழுவினால் நீதிமன்றில் தாக்கல் செய்யப்பட்ட வழக்கு விசாரணையை எதிர்வரும் ஜூன் மாதம் 13ஆம் திகதி வரை ஒத்திவைக்குமாறு கொழும்பு மேல் நீதிமன்றம் செவ்வாய்க்கிழமை (18) அன்று உத்தரவிட்டுள்ளது.

மேலும் இவ்வழக்கில் குற்றஞ்சாட்டப்பட்ட அரச



அச்சக கூட்டுத்தாபனத்தின் முன்னாள் தலைவர் ஜயம்பதி பண்டார ஹின்கந்தவின் விசாரணையையும் ஜூன் மாதம் 13ஆம் திகதி வரை ஒத்திவைக்க உத்தரவு பிறப்பிக்கப்பட்டுள்ளது.

தொடர்ச்சி P2

## பண முறைகேடு வழக்கு; நாமலுக்கு பிணை

முறைகேடாக சுமார் 70 மில்லியன் ரூபாவை பயன்படுத்தியதாக குற்றம்சாட்டப்பட்டுள்ள பாராளுமன்ற உறுப்பினர் நாமல் ராஜபக்ஷவை பிணையில் விடுவிக்குமாறு கொழும்பு மேல் நீதிமன்றம் செவ்வாய்க்கிழமை (18) உத்தரவிட்டுள்ளது.

அதன்படி, நாமல் ராஜபக்ஷ 10 மில்லியன்



ரூபாய் பெறுமதியான இரண்டு பிணைகளில் விடுவிக்கப்பட்டுள்ளார்.

நாமல் ராஜபக்ஷவுக்கு எதிராக சட்டமா அதிபரால் நீதிமன்றில் தாக்கல் செய்யப்பட்டிருந்த குற்றப்பத்திரிகை இன்றைய தினம் கொழும்பு மேல் நீதிமன்ற நீதிபதி மஞ்சுள திலகரத்ன முன்னிலையில் விசாரணைக்கு எடுத்துக்கொள்ளப்பட்ட போதே இந்த உத்தரவு பிறப்பிக்கப்பட்டுள்ளது.

## ஆசிரியர் வெற்றிடங்களுக்கு வருட இறுதிக்குள் தீர்வு



நாடளாவிய ரீதியில் நிலவும் ஆசிரியர் வெற்றிடங்களை நிரப்புவதற்கு இந்த வருடத்திற்குள் நடவடிக்கை எடுக்கப்படும் என கல்வி உயர்கல்வி அமைச்சரான பிரதமர் ஹரிணி அமரசூரிய தெரிவித்துள்ளார்.

அத்துடன், ஆசிரியர் கலாசாலைகளில் இருந்து வெளியேறும் ஆசிரியர்களுக்கும் இந்த வருடத்திற்குள் நியமனங்களை வழங்குவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும்

தொடர்ச்சி P2

## “எரிபொருள் வரியை குறைப்போம்”

பெற்றோலிய விற்பனையின் மூலம் 2023 -2024 வரையான காலப்பகுதியில் பெற்றோலிய கூட்டுத்தாபனம் 42.04 பில்லியன் ரூபாய் இலாபமடைந்துள்ளது. எனவே, எரிபொருள் இறக்குமதியின் போது அறவிடப்படும் 50 சதவீத வரியை குறைப்பதற்கு கவனம் செலுத்தப்பட்டுள்ளது என அரச தரப்பு பிரதம கொறடாவும் அமைச்சருமான நளிந்த ஜயதிஸ்ஸ தெரிவித்துள்ளார்.

பாராளுமன்றத்தில் செவ்வாய்க்கிழமை (18) இடம்பெற்ற வாய்மூல விடைக்கான வினா நேரத்தில் ஐக்கிய மக்கள் சக்தியின் எம்.பியான தயாசிறி ஜயசேகர எழுப்பிய கேள்விகளுக்கு பதிலளிக்கையில் இவ்வாறு குறிப்பிட்டுள்ளார்.

அவர் மேலும் கூறுகையில், 2023.10.22ஆம் திகதி முதல் 2024.10.21ஆம் திகதி வரையான காலப்பகுதியில் பெற்றோலிய விற்பனையின் மூலம் 265.63 பில்லியன் ரூபாய் வருமானம் பெற்றுக்கொள்ளப்பட்டுள்ளது. இக்காலப்பகுதியில் இலங்கை பெற்றோலிய கூட்டுத்தாபனம் 42.04 பில்லியன் ரூபாய் இலாபமடைந்துள்ளது.

இக்காலப்பகுதியில் எரிபொருள் விற்பனையில் ஏதேனும் மோடிகள் இடம்பெற்றுள்ளதா என்பது தொடர்பில் விசாரணைகள் இடம்பெறுகின்றன. விசாரணை அறிக்கை பாராளுமன்றத்துக்கு வெகு விரைவில் சமர்ப்பிக்கப்படும் என்றார்.



## “வரவு - செலவுத் திட்டத்திற்கு பிறகு தேர்தலை நடத்துங்கள்”

உள்ளூராட்சி மன்றத் தேர்தல்கள் பல வருடங்களாக ஒத்திவைக்கப்பட்ட போது, ஐக்கிய மக்கள் சக்தி, நீதிமன்றத்திற்குச் சென்று தேர்தலை நடத்த வேண்டும் என்ற நீதிமன்ற நடவடிக்கைகளை முன்னெடுத்துச் சென்றது. பிரச்சினையான சூழ்நிலை காரணமாகப் பழைய வேட்புமனுக்கள் இரத்துச் செய்யப்பட்டு, புதிய வேட்புமனு கோரப்பட வேண்டும் என்று அனைவரும் முன்வந்து இதனை ஆதரித்தனர் என்று எதிர்க்கட்சித் தலைவர் தெரிவித்துள்ளார்.

எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாச, செவ்வாய்க்கிழமை(18) தேர்தல்கள் ஆணைக்குழு உறுப்பினர்களைச் சந்தித்துள்ளார். இதற்குப் பின்னர் ஊடகங்களுக்குக் கருத்து தெரிவிக்கும் போதே இவ்வாறு குறிப்பிட்டுள்ளார்.

இது தொடர்பில் மேலும் அவர் தெரிவித்துள்ளதாவது,

எதிர்க்கட்சியைப் பிரதிநிதித்துவப்படுத்தி 66 பாராளுமன்ற உறுப்பினர்கள் உள்ளனர். தற்போது பாராளுமன்றத்தில் இரண்டாவது மதிப்பீட்டு விவாதம் நடைபெற்று வருகிறது.

25 ஆம் திகதி வாக்கெடுப்பு நடத்தப்படும். அதன்பிறகு, குழு நிலை விவாதம் நடக்கும்.

சகல பாராளுமன்ற உறுப்பினர்களும் இக்காலப்பிரில் சட்டவாக்கப் பணிகளைச் செய்ய உறுதி பூண்டுள்ளனர்.

சபையில் மட்டுமன்றி, பல்வேறு குழுக்களும் காணப்படுகின்றன. இந்த வரவு - செலவுத் திட்டக் காலத்தில் பாராளுமன்ற உறுப்பினர்கள், சட்டவாக்க நடைமுறையில் தமது பொறுப்புக்களை நிறைவேற்றும் வாய்ப்பை அவர்களுக்கு வழங்கி, மார்ச் 21 ஆம் திகதிக்குப் பின்னர் தேர்தல் வேலைத்திட்டத்தை முன்னெடுக்குமாறு தேர்தல்கள் ஆணைக்குழுவிடம் கோரிக்கை விடுத்துள்ளோம்.



தொடர்ச்சி P2

PAGE 1 தொடர்ச்சிகள்

# "வாய்ப்பு"

100 சதவீத செலவில் 69 சதவீதமானவை நடைமுறை செலவுகளுக்காக ஒதுக்கப்பட்டுள்ளன. 31 சதவீதமானவை மட்டுமே முதலீடுகளாக உள்ளன. நாட்டின் பொருளாதாரத்தை கட்டியெழுப்புதல் என்பது மூலதன செலவுகள் ஊடாகவே கட்டியெழுப்பப்பட வேண்டும். நாட்டின் மிக நெருக்கடியான நேரத்தில் பொறுப்பேற்றுள்ள அரசாங்கம் இது தொடர்பிலும் கவனம் செலுத்த வேண்டும் என்றார்.

குறிப்பாக பாதுகாப்பு செலவாக மொத்த வரவு- செலவுத் திட்டத்தில் 11 சதவீதத்தை ஒதுக்கியுள்ளீர்கள். நாட்டில் யுத்தம், சண்டை இல்லாத நேரத்தில் 442 பில்லியன் ரூபாய் ஒதுக்கப்பட்டுள்ளது. இன்னும் பல மக்கள் குடியேற்றப்படவில்லை. மக்களின் காணிகள் விடுவிக்கப்படவில்லை. தமிழர் நிலங்கள் அபகரிக்கப்பட்டுள்ள நிலையில், மிதமிஞ்சிய இராணுவ ஆளணியுடன் இருக்கும் இலங்கையில் 11 சதவீதமானவற்றை இராணுவத்திற்காக ஒதுக்கப்பட்டுள்ளமை இந்த நாட்டின் பொருளாதார வளர்ச்சிக்கு உகந்ததல்ல. அதற்கான எதிர்ப்பையும் பதிவு செய்கின்றோம்.

இதேவேளை இந்த நாட்டில் பொருளாதாரம் வளர வேண்டுமாயின் இனங்களுக்கு இடையிலான ஒற்றுமை பலமாக்கப்பட வேண்டும். வளமான இலங்கையைக் கட்டியெழுப்பப் புலம்பெயர் இலங்கையர்களே வாருங்கள் என்று ஜனாதிபதி அழைத்துள்ளார். அவர்களின் தொடர்பை ஜனாதிபதி விரும்புகின்றார். ஆனால், இந்த மண்ணில் நீண்ட காலமாகப் புரையோடிப் போயுள்ள தமிழர்களின் பிரச்சினை தொடர்பில் அரசாங்கத்திலுள்ளவர்கள் பேசுவதற்குத் தயங்குகின்றனர்.

சிங்கப்பூர், ஜப்பான், கொரியா போன்ற நாடுகள் இலங்கையை விட நாங்கள் வள வேண்டும் என்று ஒருகாலத்தில் நினைத்தனர். ஆனால் இலங்கை 1940இல் எப்படி இருந்ததோ அப்படியே இருக்கின்றன. எனினும் குறித்த நாடுகள் இப்போது இலங்கைக்கே கடன் கொடுக்கும் அளவுக்கு வளர்ந்துள்ளன. அதற்குக் காரணம் அந்த நாடுகளின் ஒற்றுமையும் வளமுமே ஆகும். இந்நிலையில், புலம்பெயர்ந்தோரே வாருங்கள் என்று அழைப்பு விடுக்கும் போது, இந்த நாட்டில் தமிழரின் அடிப்படை உரிமைகள், தமது தேசத்தில் தேசிய இனமாக அடையாளப்படுத்தும் உரிமையை இந்த நாடு எவ்வாறு வழங்க போகின்றது என்ற கேள்விகள் அவர்களிடத்தில் உள்ளன.

இந்த நாட்டில் சமஷ்டி தொடர்பில் பேசி 2026ஆம் ஆண்டில் நூறு ஆண்டுகளாகவிடும். 1926ஆம் ஆண்டில் பண்டாரநாயக்க எழுதிய கட்டுரைகள் சமஷ்டி தொடர்பில் குறிப்பிட்டிருந்தன. ஆனால் 1956 ஆம் ஆண்டில் பண்டா செல்வா ஒப்பந்தத்திற்கு முன்னர் குறிப்பிட்ட கட்டுரைகளின் மூலம் சமஷ்டி தொடர்பில் குறிப்பிட்டிருந்தார். தந்தை செல்வாவும் இது தொடர்பில் உரைகளை நிகழ்த்தியிருந்தார். சிங்கள தேசிய இனத்தின் அடையாளம் மற்றும் நிலம் எவ்வளவு முக்கியமோ அதேபோன்று இந்த மண்ணில் தோன்றி வளர்ந்த தமிழ்த் தேசிய இனத்தை அங்கீகரிக்காத வரையில் இந்த நாட்டின் தூய்மையான பயணங்களை எவ்வாறு கொண்டு செல்லப் போகின்றீர்கள் என்ற கேள்விகள் உள்ளன.

நாங்கள் எங்கள் கரங்களை உங்களுடன் கோர்த்துக்கொள்ள விரும்புகின்றோம். இரு கரங்களும் இறுகப் பற்றிக்கொள்ளப்பட வேண்டும். ஆனால் இந்த நாட்டில் சமமான பிரஜைகளாக வாழ கோரிக்கை முன்வைக்கப்பட்ட போதே தமிழ் மக்களுக்கு எதிரான வன்முறைகளும் கட்டவிழ்த்து விடப்பட்டன என்பதனை புரிந்து கொள்ளுங்கள். தமிழர்கள் சம உரிமைகளைக் கேட்ட போதே வன்முறைகள் கட்டவிழ்த்துவிடப்பட்டன. இது போன்று பல சம்பவங்கள் நடந்துள்ளன. நீறு பூத்த நெருப்பை போன்றே இனப் பிரச்சினை உள்ளது.

தமிழரின் கோரிக்கைகளை மழுங்கடிக்கச் செய்யாதீர்கள். நாட்டில் நீங்களும் நாங்களும் சேர்ந்து வாழ வேண்டும். சமாதானத்தை அடையும் தூரம் நீண்டதாகத் தெரிகின்றது. அதனை நெருக்கமாகக் கொண்டுவாருங்கள். உங்களின் காலத்தில் அதனை செய்ய முடியுமென்ற நம்பிக்கையைக் கொண்டு வாருங்கள் என்றார்.

## 8 மாகாணங்கள் புறக்கணிப்பு

குறிப்பிட்டுள்ள திட்டங்கள் அனைத்தையும் நிறைவேற்ற வேண்டும். இல்லையேல், பிரச்சினைகள் மாத்திரமே ஏற்படும்.

நலன்புரி கொடுப்பனவுகள் அதிகரித்துள்ளதை வரவேற்கிறேன். பல்கலைக்கழக மாணவர்களுக்கு வழங்கப்படும் மஹாபொல கொடுப்பனவு 2500 ரூபாவால் அதிகரிக்கப்பட்டுள்ளது. களனி பல்கலைக்கழக மாணவர்கள் தான் கடந்த காலங்களில் மக்கள் விடுதலை முன்னணிக்கு ஆதரவாகச் செயற்பட்டுக் கடந்த அரசாங்கங்களுக்கு எதிராகப் போராட்டத்தில் ஈடுபட்டனர்.

களனியில் இருந்து கொழும்புக்குப் பேரணியாக வருவார்கள்.

ஆகவே தற்போது அதிகரித்துள்ள கொடுப்பனவை மேலும் அதிகரிக்குமாறு கோருகின்றேன்.

## வரலாற்றில் கல்விக்காக அதிக தொகையை ஒதுக்கிய பட்ஜெட்

* தெரிவுசெய்யப்பட்ட ஆரம்பகால சிறு பராய அபிவிருத்தி நிலையங்களின் அபிவிருத்திக்காக ரூ.80 மில்லியன் ஒதுக்கீடு செய்ய முன்மொழியப் பட்டுள்ளது.

* முன்பள்ளி ஆசிரியர்களின் சேவைகளுக்காக தற்போது வழங்கப்படும் கொடுப்பனவை 1,000 ரூபாவினால் அதிகரிக்க 100 மில்லியன் ரூபாவை ஒதுக்க முன்மொழியப்பட்டது.

* பாடசாலை உட்கட்டமைப்பை மேம்படுத்த 1,000 மில்லியன் ரூபாயும் பாடசாலைகளின் தரத்தை மேம்படுத்துவதற்காக 135 மில்லியன் ரூபாவை ஒதுக்குவதற்கும் முன்மொழியப்பட்டது.

* தற்போதுள்ள பாடசாலை முறைமையை மீளாய்வு செய்து தேசிய திட்டமொன்றை தயாரிப்பதற்கு 500 மில்லியன் ரூபாவை ஒதுக்க முன்மொழியப்பட்டது.

* தரம் ஐந்து புலமைப்பரிசில் பரீட்சையில் சித்தியடைந்த குறைந்த வருமானம் பெறும் மாணவர்களுக்கு வழங்கப்படும் கல்வி உதவித் தொகையை 750 ரூபாயில் இருந்து 1500 ரூபாய் வரையில் அதிகரிக்க 1,000 மில்லியன் ரூபாவை ஒதுக்க முன்மொழியப்பட்டது.

* விளையாட்டுத் துறையில் ஈடுபடும் மாணவர்களுக்கு வழங்கப்படும் சத்துணவு மேலதிக உணவு உதவித்தொகை 5,000 ரூபாயிலிருந்து 10,000 ரூபாயாக உயர்த்தவும், தொழிற்கல்வி பயிலும் மாணவர்களுக்கான உதவித்தொகையை 4,000 ரூபாயிலிருந்து 5,000 ரூபாயாக அதிகரிக்கவும் ரூ. 200 மில்லியன் ரூபா முன்மொழியப்பட்டது.

* பல்கலைக்கழக மாணவர்களுக்கான மஹாபொல உதவித்தொகையை ரூபா 5,000 இலிருந்து ரூபா 7,500 ஆக அதிகரிக்கவும் பல்கலைக்கழக மாணவர்களுக்கான மாணவர் உதவித் தொகையை ரூ.4,000 இலிருந்து ரூ.6,500 ஆக அதிகரிக்கவும் 4,600 மில்லியன் ரூபாவை ஒதுக்க முன்மொழியப்பட்டது.

* உயர்தர பல்கலைக்கழகத்தில் கல்வி நடவடிக்கைகளை தொடர்வதற்காக திறமையானவர்களுக்கு வெளிநாடுகளில் கல்வி கற்கத் தேவையான ஏற்பாடுகளை வழங்கும் வேலைத்திட்டம் ஒன்றை ஆரம்பிக்க 200 மில்லியன் ரூபாவை ஒதுக்க முன்மொழியப்பட்டது.

* யாழ்ப்பாணம் மற்றும் ஏனைய பிரதேசங்களில் உள்ள நூலகங்களை மேம்படுத்த 100 மில்லியன் ரூபாவை ஒதுக்க முன்மொழியப்பட்டது.

* ஐந்து மாகாணங்களில் விசேட விளையாட்டுப் பாடசாலைகளை அபிவிருத்தி செய்வதற்கு 500 மில்லியன் ரூபாவை ஒதுக்குவதற்கு முன்மொழியப் பட்டது.





## IMF நிறைவேற்று சபை 28 கூடுகிறது

இதன்படி, சர்வதேச நாணய நிதியத்தின் நிறைவேற்று சபை மூன்றாவது மீளாய்வைப் பரிசீலித்து அங்கீகரிக்குமாயின், இலங்கைக்கு நீடிக்கப்பட்ட கடன் வசதியின் கீழ் நான்காவது தவணையாக மேலும் 333 மில்லியன் அமெரிக்க டொலர் கடனுதவி கிடைக்கப் பெறும் என எதிர்பார்க்கப்படுகிறது.

## கெஹலியவுக்கு எதிரான வழக்கு விசாரணை ஒத்திவைப்பு



இந்த வழக்கு செவ்வாய்க்கிழமை (18)கொழும்பு மேல் நீதிமன்ற நீதிபதி சுஜீவ நிஷங்க முன்னிலையில் அழைக்கப்பட்டிருந்த போதே இந்த உத்தரவு பிறப்பிக்கப்பட்டுள்ளது.

கெஹெலிய ரம்புக்வெல்ல வெகுஜன ஊடகத்துறை அமைச்சராகக் கடமையாற்றிய காலத்தில் தனது கையடக்கத் தொலைபேசியின் கட்டணத்திற்குச் செலுத்த வேண்டியிருந்த 2 இலட்சத்து 40 ஆயிரம் ரூபா பணத்தை, அரச அச்சக கூட்டுத்தாபனத்தின் நிதியைப் பயன்படுத்திச் செலுத்தியதால் அரசாங்கத்திற்கு நஷ்டம் ஏற்பட்டுள்ளதாக கெஹலிய ரம்புக்வெல்ல மற்றும் அரச அச்சக கூட்டுத்தாபனத்தின் முன்னாள் தலைவர் ஆகியோருக்கு எதிராக இலஞ்ச ஊழல் ஆணைக்குழுவினால் நீதிமன்றில் வழக்கு தாக்கல் செய்யப்பட்டிருந்தமை குறிப்பிடத்தக்கது.

## "வரவு - செலவுத் திட்டத்திற்கு...

பல்வேறு குழுக்களும் தேர்தலை ஒத்திவைக்கக் கோரியும் வருகின்றன, பாராளுமன்ற நடைமுறை என்பது மிக முக்கியமான ஒன்றாகும். புதிதாகப் பாராளுமன்றத்திற்கு வந்தவர்கள் இதனை பெரியதொரு விடயமாகப் பார்க்காமல் இருக்கலாம், பாராளுமன்ற நடைமுறை தெரியாவிட்டால் புத்தகங்களைப் படித்துப் புரிந்து கொள்ளுமாறு கேட்டுக்கொள்கிறேன். எனவே, வரவு - செலவுத் திட்டத்திற்குப் பின்னர் இந்தத் தேர்தலை நடத்துமாறு கோரிக்கை விடுக்கின்றேன்.

ஆளும் தரப்பைச் சேர்ந்த தலைவர்கள் தேர்தல் ஆணைக்குழுவை தமது கைப்பாவையாகக் கருதுகின்றனர். தேர்தலை நடத்த வேண்டிய திகதிகள் மற்றும் வேட்பு மனுக்களைக் கோரும் திகதிகளை அரசாங்கம் தீர்மானிக்க முடியாது. ஆளும் தரப்பினர் இவற்றைக் குழப்பிக்கொண்டுள்ளனர் என்றும் எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாச மேலும் தெரிவித்துள்ளார்.

## ஆசிரியர் வெற்றிடங்களுக்கு வருட இறுதிக்குள் தீர்வு

என்றும் இந்த வருடத்திற்குள் பெரும்பாலான ஆசிரியர் வெற்றிடங்களை நிரப்ப முடியும் என்றும் அவர் சபையில் நம்பிக்கை வெளியிட்டார்.

பாராளுமன்றத்தில் செவ்வாய்க்கிழமை (18) வாய்மூல விடைக்கான வினா நேரத்தில் எதிர்க்கட்சி எம்.பி. சாமர சம்பத் தசநாயக்க எழுப்பிய கேள்விக்குப் பதிலளிக்கும் போதே பிரதமர் இவ்வாறு தெரிவித்தார்.

சாமர சம்பத் தசநாயக்க எம்.பி., மாகாண சபை பாடசாலைகளிலிருந்து தேசிய பாடசாலைகளுக்கு ஆசிரியர்கள் இணைத்துக் கொள்ளப்பட்டு வந்தார்கள். எனினும் அதற்கான கால எல்லையை மீண்டும் நீடிக்காமல் இருப்பதற்குத் தீர்மானம் எடுக்கப்பட்டுள்ளது என்பதை கல்வி அமைச்சர் அறிவாரா? என கேள்வி எழுப்பினார்.

இதற்குப் பதிலளித்த பிரதமர், தேசிய பாடசாலைகளிலிருந்து மேலதிகமாக காணப்படும் ஆசிரியர்களை மாகாண பாடசாலைகளுக்கும் மாகாண பாடசாலைகளில் மேலதிகமாக காணப்படும் ஆசிரியர்களைத் தேசிய பாடசாலைகளுக்கு நியமிப்பதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வந்தன.

எனினும், நீதிமன்றத்தில் அது தொடர்பான வழக்கு ஒன்று தாக்கல் செய்யப்பட்ட நிலையில் அது நிறுத்தப்பட்டிருந்தது. எனினும் பின்னர் கிடைத்த நீதிமன்ற தீர்ப்பையடுத்து மீண்டும் அதற்கான வாய்ப்பு கிடைத்துள்ளது.

அந்த வகையில் இந்த வருட இறுதிக்குள் ஆசிரியர் வெற்றிடங்களை நிரப்புவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும் என்றார்.



## எகிறியது கொத்து பிரைட் ரைசின் விலை

பிரைட் ரைஸ், கொத்து, ஆகியவற்றின் விலைகள் அதிகரிக்கப்படும் என அகில இலங்கை சிற்றுண்டிச்சாலை உரிமையாளர்கள் சங்கம் தெரிவித்துள்ளது.

அதன்படி, பிரைட் ரைஸ், கொத்து ஆகியவற்றின் விலைகள் 30 ரூபாவினாலும், தேநீரின் விலை 05 ரூபாவினாலும், பால் தேநீரின் விலை 10 ரூபாவினாலும் மேலும், சிற்றுண்டிச்சாலைகளில் விற்பனை செய்யப்படும் உணவுப் பொருட்கள் சிலவற்றின் விலைகளை அதிகரிக்க தீர்மானித்துள்ளதாகவும் குறிப்பிட்டுள்ளது.

மேலும் குறித்த சங்கம் தெரிவிக்கையில், இந்த விலை அதிகரிப்பானது செவ்வாய்க்கிழமை (18) நள்ளிரவு முதல் அமுல்படுத்தப்பட்டுள்ளது.



2025ஆம் ஆண்டுக்கான வரவு - செலவுத் திட்டத்தில் அகில இலங்கை சிற்றுண்டிச்சாலை உரிமையாளர்கள் சங்கத்திற்கு எந்தவித சலுகைகளும் வழங்கப்படாததால் இந்த தீர்மானம் எடுக்கப்பட்டுள்ளது.

## முன்னாள் எம்.பி. மகனுடன் கைது



சட்டவிரோதமாக அசெம்பிள் செய்யப்பட்ட சொகுசு காரை வைத்திருந்த சம்பவம் தொடர்பாக, முன்னாள் புத்தளம் மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் சாந்த அபேசேகர மற்றும் அவரது மகன், சட்டவிரோத சொத்துக்கள் மற்றும் சொத்து விசாரணைப் பிரிவு அதிகாரிகளால் கைது செய்யப்பட்டனர்.

சட்டவிரோதமாக அசெம்பிள் செய்யப்பட்ட சொகுசு கார் தொடர்பாக கடந்த 6 திகதி நடத்தப்பட்ட விசாரணைகளைத் தொடர்ந்து, காரின் பல பாகங்கள் பொலிஸாரால் கைப்பற்றப்பட்டுள்ளதுடன் இது தொடர்பில் வாக்குமூலம் வழங்குவதற்காக அவர்கள் வந்த போதே இந்த கைது நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது.

மேலும், குறித்த சந்தேக நபர்களை புதன்கிழமை(19) அன்று மஹர நீதவான் நீதிமன்றத்தில் ஆஜர்படுத்தவுள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

## ஏழைய மாணவர்களுக்கான

# இலவசமான ஒளியை தடுக்கும் 'சூரிய' குமார்

### சமைத்த உணவையும், சமைக்காமல் ருசிக்கிறாராம்

பாடசாலை மாணவர்களுக்கு இலவச பாடநூல், இலவச சீருடை கல்வி அமைச்சினால் வழங்கி வருவதுடன், தெரிவு செய்யப்பட்ட பாடசாலைகளின் மாணவர்களுக்கு இலவச பாதணிக்கான வவுச்சர்களும் வழங்கப்பட்டுள்ளன. இவை அனைத்தும் மாணவர்களின் கல்வி வளர்ச்சிக்காகவே அரசாங்கம் பெருந்தொகை நிதியை ஒதுக்கீடு செய்து வருகிறது.

இருப்பினும், சில பாடசாலைகளின் சில நிர்வாகிகள் அரசாங்கத்தால் மாணவர்களுக்கு வழங்கும் இலவசங்களுக்கு சில தடைகளை ஏற்படுத்துவதாகத் தெரிய வருகிறது.

குறிப்பாக, நுவரெலியா கல்வி வலயத்திலுள்ள, குளிரான பிரதேச பாடசாலை ஒன்றின் அதிபர் மற்றும் நிர்வாகிகள் சட்டத்திற்குப் புறம்பான செயற்பாடுகளில் ஈடுபட்டு வருவதாகத் தகவல்கள் கிடைத்துள்ளன.



குறித்த பாடசாலை மாணவர்களுக்காக வழங்கப்பட்ட ரூ.3,000 இற்கான பாதணி வவுச்சர் இன்று வரையிலும் எந்தவொரு மாணவருக்கும் விநியோகிக்கப்படவில்லை.. எதிர்வரும் வாரத்தில் பாடசாலை அபிவிருத்தி சங்கத்திற்கான வருடாந்த சந்தா ரூ.600 செலுத்தும் மாணவர்களுக்கு மட்டுமே பாதணி வவுச்சர் வழங்கப்படும் என தெரிவித்துள்ளதாக பெற்றோர் குற்றஞ்சாட்டுக்கின்றனர்.

அத்துடன், இப்பாடசாலையின் ஆரம்ப பிரிவு மாணவர்களுக்காக சமைத்த உணவை வழங்குபவர்களிமிருந்தும் மாதாந்தம் குறிப்பிட்ட தொகையை கமிஷனாக வசூலித்து வருவதாகவும் தகவல்கள் கசிந்துள்ளன.

அத்துடன், புதிய மாணவர் அனுமதியின் போதும் பெருந்தொகை பணம் அல்லது பொருட்களை நன்கொடையாக வழங்க வேண்டுமென அதிகார தோரணையில பேசி அதனையும் சிறப்பாக செய்து வருகின்றார் என்று அறியமுடிகின்றது. ஆகையால், இப்படிப்பட்ட அதிபர்களுக்கெதிராக கடுமையான சட்ட நடவடிக்கைகளை யார் எடுப்பது?

இந்த குற்றச்சாட்டு குளிரான பிரதேசத்தைச் சேர்ந்த 'சூரிய' குமாருக்கு எதிராகவே முன்வைக்கப்பட்டுள்ளது என்பதையும் சுட்டிக்காட்ட விரும்புகின்றோம்.



# இரண்டு மோட்டார் சைக்கிள் மோதி விபத்து

■ பாறுக் ஷிஹான்

அம்பாறை - கல்முனை பிரதான வீதியில் திங்கட்கிழமை (18) அன்று இரு மோட்டார் சைக்கிள் மோதி விபத்திற்குள்ளானதில் இருவர் காயமடைந்து சம்மாந்துறை ஆதார வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

இந்த சம்பவம் தொடர்பான மேலதிக விசாரணைகளை சம்மாந்துறை பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர்.

# கனடாவுக்கு பாய முயன்ற யாழ்.ஜோடி கைது

போலியான கனேடிய விசாக்களைப் பயன்படுத்தி ஜப்பான் வழியாகக் கனடாவுக்கு தப்பிச் செல்ல முயன்ற இலங்கைத் தம்பதியினர் கட்டுநாயக்க விமான நிலையத்தில் குடிவரவு மற்றும் குடியகல்வுத் துறை அதிகாரிகளால் கைது செய்யப்பட்டுள்ளனர்.

இந்த இருவரும் யாழ்ப்பாணப் பகுதியில் வசிக்கும் திருமணமான தம்பதிகள். கணவருக்கு 40 வயது, மனைவிக்கு 34 வயது.

ஜப்பானின் நரிட்டாவிற்கு திங்கட்கிழமை (17) இரவு 8.35 மணிக்குப் புறப்பட்ட ஸ்ரீலங்கன் எயார் லைன்ஸ் விமானம் UL-454 இல் ஏறுவதற்காக அவர்கள் கட்டுநாயக்க விமான நிலையத்தை வந்தடைந்துள்ளனர்.

இருவரும் விமான நிலையத்தை வந்தடைந்த போது, அவர்கள் விமான அனுமதிக்காகச் சமர்ப்பித்த ஆவணங்களில் கனேடிய விசாக்கள் இருந்ததாகச் சந்தேகித்த விமானப் போக்குவரத்து அதிகாரிகள், குடிவரவு மற்றும் குடியகல்வுத் துறையின் எல்லை கண்காணிப்பு பிரிவின் அதிகாரிகளிடம் அவற்றை ஒப்படைக்க நடவடிக்கை எடுத்துள்ளனர்.



# "சீனாவுக்கு எம்மை பயன்படுத்த விடமாட்டோம்"

அத்துமீறிய இந்திய இழுவமடி படகுகளால் எமது மீனவர்கள் பாதிக்கப்பட்டு வரும் நிலையில் அதனைப் பயன்படுத்திய சீனா, இந்தியத் தேசியப் பாதுகாப்புக்கு அச்சுறுத்தல் விடும் வகையில் எம்மை பயன்படுத்துவதற்கு இடமளிக்க மாட்டோம் என யாழ். மாவட்ட கடற்றொழிலாளர் கிராமிய அமைப்புகளில் தலைவர் செல்லத்துரை நற்குணம் தெரிவித்துள்ளார்.

யாழ். மாவட்ட கடற்றொழிலாளர் கூட்டுறவு சங்கங்கத்தில் செவ்வாய்க்கிழமை (18) இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பின் போதே அவர் இவ்வாறு குறிப்பிட்டுள்ளார்.

மேலும் அவர் தெரிவிக்கையில்..

"கடந்த வாரம் சீன தூதரக அதிகாரிகளை எமது கடற் தொழிலாளர் சங்கப் பிரதிநிதிகள் யாழ்ப்பாணத்தில் சந்தித்தோம்.

இதன்போது கடந்த கொரோனா காலங்கள் மற்றும் இந்திய இழுவைப் படகுகளினால் பாதிக்கப்பட்ட எமது மீனவர்களுக்கு பல்வேறுபட்ட உதவிகளைச் செய்தார்கள்.

அவர்கள் செய்த உதவிக்கு நன்றியைத் தெரிவித்ததோடு, தொடர்ந்து இந்திய இழுவமாடியால் பாதிக்கப்பட்டு வரும் எமது மீனவர்களுக்கு உதவி செய்யுமாறு கோரிக்கை விடுத்தோம்.

இதே கோரிக்கையை இந்தியா அரசிடமும் முன் வைத்திருக்கிறோம் யார் எமது மக்களுக்கு உதவிக்கரம் நீட்டினாலும் அதை நாம் பெற்றுக் கொள்ளத் தயாராக இருக்கிறோம்.

இந்தியா அத்துமீறிய இழுவைமடிப் படகுகளால் தொடர்ச்சியாக நாம் பாதிக்கப்பட்டு வரும் நிலையில் சீனா எமக்கு உதவி செய்கிறோம் என எமது கடல் பிராந்தியத்தால் இந்தியத் தேசியப் பாதுகாப்புக்கு அச்சுறுத்தல் விடும் வகையில் எம்மை பயன்படுத்த எதிர்பார்த்தால் அதைச் செய்ய முடியாது.

இந்தியா எமது அயல் நடு அது மாத்திரமல்ல எமது தொப்புள் கொடி உறவு என்ற ரீதியில் இந்தியாவின் பாதுகாப்புக்கு அச்சுறுத்தலாக எமது கடலை பயன்படுத்த அனுமதிக்கப் போவதில்லை" எனவும் அவர் மேலும் தெரிவித்துள்ளார்.

# சாரண சங்கத்திடம் ஒப்படைக்கப்பட்ட ரயில் நிலைய வேலைத் திட்டம்

■ வ.சக்தி

இலங்கை அரசின் 'தூய்மையான இலங்கை' (Clean Sri Lanka) திட்டத்தின் கீழ் ரயில் நிலையங்களை 'அழகுபடுத்தலும் பராமரித்தலும்' வேலைத் திட்டம் இலங்கை தேசிய சாரண சங்கத்திடம் இலங்கை அரசினால் ஒப்படைக்கப்பட்டுள்ளது.

இதனடிப்படையில் மாவட்டங்கள் தோறும் உள்ள ரயில் நிலையங்களை அழகுபடுத்தும் செயற்பாடுகள் நடைபெறவுள்ளன. குறித்த ரயில் நிலையங்கள் அமைந்துள்ள மாவட்ட சாரண சங்கங்களிடம் மேற்படி வேலைத்திட்டம் ஒப்படைக்கப்பட்டுள்ளன.

இதனடிப்படையில் மட்டக்களப்பு மாவட்ட சாரண சங்கம் மட்டக்களப்பு மாவட்டத்தில் உள்ள ரயில் நிலையங்களை அழகுபடுத்தும் வேலைத் திட்டத்தைத் திட்டமிட்டு வருகிறது. இச்செயற்றிட்டம் பதில் மாவட்ட ஆணையாளரும் பிரதிப் பிரதம ஆணையாளருமான (நிதி) அமிதன் கார்மேகம் தலைமையில் இடம்பெறவுள்ளது.

இதன் முதற்கட்டமாக மட்டக்களப்பு மாவட்ட சாரண சங்கம் மட்டக்களப்பு மாவட்ட பதில் மாவட்ட சாரண ஆணையாளரின் பணிப்புரைக்கு அமைய மட்டக்களப்பு ரயில் நிலைய அதிபரைச் சந்தித்துக் கலந்துரையாடியுள்ளது.



இச்சந்திப்பில் சாரண தலைமையக ஆணையாளர் பொ.சசிகுமார், அ.நிசாந்தன், உதவி மாவட்ட ஆணையாளர் (நிகழ்ச்சி) ஆ.புட்கரன், உதவி மாவட்ட ஆணையாளர் (பயிற்சி) சிவாஜினி ஜெயராஜ் உதவி மாவட்ட ஆணையாளர் (நிருவாகம்) ம.சந்திரசுசர்மன், உதவி மாவட்ட ஆணையாளர் (மட்டு. வலயம்) பி.ஜோன், உதவி மாவட்ட ஆணையாளர் (மட்டு மத்தி) ப.தினேஸ் உதவி மாவட்ட ஆணையாளர் (நிதி) ஆகியோர் கலந்து கொண்டுள்ளனர்.

முன்னுரிமை அடிப்படையில் செய்யப்பட வேண்டிய வேலைகள் இனங்காணப்பட்டு பட்டியல் படுத்தப்பட்டுள்ளன. கழிவுகளை அப்புறப்படுத்துதல், சூழலை அழகுபடுத்தல், பொதுமக்களுக்கு விழிப்புணர்வை ஏற்படுத்தல், இதற்காகப் பதாகைகளை காட்சிப்படுத்தல், மரம் நடுதல், போன்ற விடயங்கள் முன்னிலைப்படுத்தப்பட்டுச் செயற்படுத்தப்படவுள்ளன. இதற்காக மட்டக்களப்பு மாநகர சபை, மாவட்டத்தில் உள்ள பிரதேச சபைகள், பாதுகாப்புப் பிரிவினரின் ஒத்துழைப்பைக் கோருவது எனவும் தீர்மானிக்கப்பட்டுள்ளது.

# நீச்சல் தடாகத்தில் விழுந்து இந்திய மாணவன் பலி

கண்டியில் உள்ள விடுதியொன்றில் தங்கியிருந்த இந்தியப் பல்கலைக்கழக மாணவர்கள் குழுவில் ஒரு மாணவன் நீச்சல் தடாகத்தில் விழுந்து தலையில் பலத்த காயமடைந்து கண்டியில் உள்ள தனியார் மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டு உயிரிழந்துள்ளதாக பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

மெனிக்ஹின்ன, குண்டசாலை, தம்பராவ பகுதியில் உள்ள விடுதியில் தங்கியிருந்த 26 வயதான சந்தோஷ் என்ற மாணவனே இவ்வாறு உயிரிழந்துள்ளார்.

இவர், இந்திய பல்கலைக்கழக மாணவர் ஆவார். பல்கலைக்கழக மாணவர்கள் ஒன்பது பேர் அடங்கிய குழு ஒன்று கடந்த 16ஆம் திகதி முதல் விடுதியில் தங்கியிருந்த நிலையில் செவ்வாய்க்கிழமை (18) அதிகாலை நீச்சல் தடாகத்தில் நீந்திக்கொண்டிருந்தனர். இதற்கிடையில், பல்கலைக்கழக மாணவர் ஒருவர் நீச்சல் குளத்தில் விழுந்து தலையில் பலத்த காயமடைந்து மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்ட பின்னர் உயிரிழந்துள்ளார்.



# காத்தான்குடியில் 42 பேர் கைது

■ ரீ.எல்.ஜவ்பர்கான்

காத்தான்குடியில் போதைப்பொருள் சம்பவங்களுடன் தொடர்புடைய 42 பேர் கைது செய்யப்பட்டுள்ளனர் .

காத்தான்குடி பொலிஸார் நடத்திய திடீர் சுற்றிவளைப்பு தேடுதல் நடவடிக்கைகளின் போது, தேடுதல் நடவடிக்கையின் போது ஐஸ் போதைப் பொருட்களுடன் 15 பேரும்,கேரள கஞ்சாவை வைத்திருந்த ஒருவரும், சட்டவிரோத சிகரெட்களுடன் இரு நபர்களும் கசிப்பு போதை பொருள் விற்பனை மற்றும் தயாரிப்பில் ஈடுபட்ட 24 நபர்களுமாக 42 பேர் கைது செய்யப்பட்டுள்ளனர்

கைது செய்யப்பட்டவர்களிடமிருந்து ஐஸ், கேரள கஞ்சா, கசிப்பு போதைப்பொருள், சிகரெட்கள், சகிப்பு தயாரிப்பு உபகரணங்கள்,எரிவாயு சிலிண்டர் என்பன மீட்கப்பட்டுள்ளன.

மேலும் கைதான நபர்கள் மட்டக்களப்பு நீதவான் நீதிமன்றத்தில் செவ்வாய்க்கிழமை (18) ஆஜர் படுத்தப்பட உள்ளதுடன் காத்தான்குடி பொலிஸார் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டுள்ளனர்.



# தமிழ் ஊடகவியலாளர் ஒன்றியத்தின் நிர்வாகிகள் தெரிவு

'அகில இலங்கை தமிழ் ஊடகவியலாளர் ஒன்றியம்' எனும் பெயரில் புதிய அமைப்பொன்று உருவாக்கப்பட்டுள்ளதுடன், இதற்கான கூட்டம் கொழும்பு தமிழ்ச் சங்கத்தில் ஞாயிற்றுக்கிழமை(16) மணிக்கு நடைபெற்றுள்ளது.

இதன்போது, தமிழ் ஊடகவியலாளர்களுக்கான புதிய ஒன்றியத்தின் நிர்வாக தெரிவுகள் இடம்பெற்றுள்ளன. இதற்கமைய ஒன்றியத்தின் தலைவராகத் தினகரன் பத்திரிகையின் பிரதம ஆசிரியர் தே.செந்தில் வேலவர் தெரிவு செய்யப்பட்டுள்ளார்.

ஒன்றியத்தின் செயலாளராகத் தமிழன் பத்திரிகையின் பிரதம ஆசிரியர் ஆர்.சிவராஜாவும், பொருளாளராகத் வருணியும் (தமிழன் பத்திரிகை) தெரிவு செய்யப்பட்டுள்ளனர்.

மேலும், ஒன்றியத்தின் பிரதித் தலைவர்களாகத் தில்லையம்பலம் தரணீதரன் (சுயாதீன ஊடகவியலாளர்), கலாவர்சினி கனகரட்ணம் (சுயாதீன ஊடகவியலாளர்) ஆகியோர் தெரிவு செய்யப்பட்டதுடன், உதவிச் செயலாளர்களாக மஹேஸ்வரி விஜயனந்தன் (சுயாதீன ஊடகவியலாளர்), நிர்ஷன் இராமானுஜம் (ஊடகவியலாளர்) ஆகியோரும் தெரிவு செய்யப்பட்டுள்ளனர்.

மேலும், உதவிப் பொருளாளராக பார்த்தீபன் (சுயாதீன ஊடகவியலாளர்) தெரிவு செய்யப்பட்டதுடன்,



ஒவ்வொரு பிரதேசங்களுக்குமான பிராந்திய ஒருங்கிணைப்பாளர்களும் தெரிவு செய்யப்பட்டுள்ளனர். இந்த நிகழ்வில், அண்மையில் மறைந்த மூத்த பத்திரிக்கையாளர் இராஜநாயகம் பாரதிக்கும், மரணித்த ஊடகவியலாளர்களுக்கும் அஞ்சலி செலுத்தப்பட்டுள்ளது.

# ‘ஒரு வளமான நாடு, ஓர் அழகான வாழ்க்கை’க்கு பட்ஜெட் வழிசமைக்குமா?

ஜனாதிபதி அனுரகுமார திசாநாயக்க, தனது முதலாவது வரவு-செலவுத் திட்ட (பட்ஜெட்) உரையை முன்வைத்து, முழு இலங்கை மக்களின் கவனத்தையும் ஈர்த்தார். அவர் ஒரு பட்ஜெட் திட்டத்தை முன்வைக்க முடிந்தது, மிகுந்த திறமையுடனும், சொற்பொழிவுடனும் ஒரு பட்ஜெட் உரையை நிகழ்த்தினார்.

பாரம்பரிய எதிர்ப்பின் எளிய விளக்கத்தின் அடிப்படையில் முரண்பாடான அர்த்தங்களை உருவாக்குவதற்குப் பதிலாக, முரண்பாடான வாதங்களை உருவாக்கிய பட்ஜெட் என்றும் இதை விவரிக்கலாம்.

ஒரு பட்ஜெட் முன்மொழிவை மட்டும் கொண்டு ஒரு நாட்டை ஒரே நேரத்தில் வளமான மாநிலமாக உயர்த்த முடியும் என்று நாங்கள் எதிர்பார்க்கவில்லை. இருப்பினும், இந்த ஆண்டு பட்ஜெட் ஆவணத்தில் இதற்கான நீண்டகால அணுகுமுறை சேர்க்கப்பட்டுள்ளதை நாம் அங்கீகரிக்க முடியும். எனவே, குறுகிய அரசியல் கண்ணோட்டத்தை ஒதுக்கி வைத்துவிட்டு, சமூக-பொருளாதாரக் கண்ணோட்டத்தில் பட்ஜெட்டைப் படிக்குமாறு ஒட்டுமொத்த சமூகத்தையும் அழைக்கிறோம்.

பாராளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்படும் பட்ஜெட் ஆவணம் தொடர்பாக பல்வேறு வாதங்கள், கருத்துக்கள் மற்றும் கருத்துக்கள் முன்வைக்கப்படலாம். அவை ஒரு பாரபட்சமான கண்ணோட்டத்தில் வழங்கப்படுகின்றன. ஆனால் இது ஒரு பொதுவான சமூக சூழலில் படிக்கப்பட வேண்டிய ஒரு பட்ஜெட் ஆவணம்.

இவ்வளவு காலமாக, தொழிற்சங்கங்கள், மாணவர் இயக்கங்கள், தொழிலாள வர்க்க மக்கள் மற்றும் பொது சேவை உள்ளிட்ட பல்வேறு துறைகளைச் சேர்ந்த மக்களின் கோரிக்கைகளுக்குக் குறிப்பிட்ட மற்றும் நியாயமான தீர்வுகளை அது முன்வைத்துள்ளது. எனினும் சமாளிப்பு பட்ஜெட் என்று விமர்சிக்கப்படுகின்றது.

பட்ஜெட் மூலம் பல்வேறு திட்டங்கள் முன்வைக்கப்பட்ட போதிலும், அந்த திட்டங்கள் பின்னர் செயல்படுத்தப்படவில்லை. பட்ஜெட் திட்டங்கள் பாராளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்பட்டாலும், ஆளும் வர்க்கம் அதன் விருப்பப்படி செயல்பட்டது.

இந்த ஆண்டு வரவுசெலவுத் திட்டத்தில், அரசு ஊழியர்களின் சம்பளத்தை ரூ.40,000 ஆக உயர்த்துதல், தனியார் துறையின் அடிப்படை சம்பளத்தை 2026 க்குள் உயர்த்துவதற்கான திட்டத்தைத் தயாரித்தல், பல்கலைக்கழக மாணவர்களுக்கான மஹாபொல உதவித்தொகையை ரூ.7,500ஆக அதிகரித்தல், உர மானியத்திற்காக ரூ.35,000 மில்லியன் ஒதுக்குதல், பெரும்போகத்தில் நெல் கொள்வனவுக்கு ரூ.5,000 மில்லியன் ஒதுக்குதல் உள்ளிட்ட பல முற்போக்கான திட்டங்கள் உள்ளன.

முந்தைய பட்ஜெட் ஆவணத்தைச் சமர்ப்பித்த பிறகு, இருப்பவரிடமிருந்து எடுத்து, இல்லாதவருக்குக் கொடுப்பதையே அது குறிக்கிறது. ஆனால் அங்கு அப்படியான எந்த நடவடிக்கையும் நடைபெறவில்லை. இந்தத் திட்டங்களிலிருந்து முடிந்தவரைப் பணம் சம்பாதிக்க எம்.பிக்கள் உழைத்தனர்.

தனது வரவு செலவுத் திட்ட அறிக்கையைச் சமர்ப்பிக்கும் போது ஜனாதிபதி மற்றொரு தனித்துவமான அறிக்கையை வெளியிட்டார். அதாவது, இது ஒருவரின் தனிமைப்படுத்தப்பட்ட வெளிப்பாடு அல்ல, மாறாக ஒரு கூட்டுச் செயல்முறையின் விளைவாகும். ‘ஒரு வளமான நாடு, ஒரு அழகான வாழ்க்கை’ கொள்கை அறிக்கையில் நம்பிக்கை வைத்திருந்த மக்களின் நம்பிக்கைகளை நிறைவேற்றுவதாகவும் இது அமைகிறது.

இது பாராளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்படும் 79ஆவது பட்ஜெட் ஆகும். முன்னர் சமர்ப்பிக்கப்பட்ட அனைத்து பட்ஜெட் ஆவணங்களையும் விட இது மிகவும் சிறப்பு வாய்ந்தது என்பதை வலியுறுத்த வேண்டும். எனவே, இந்த ஆண்டு பட்ஜெட் ஆவணத்தை ஒரு திட்டத்திற்கு அப்பாற்பட்ட ஒரு திட்டமாகும். இது நடைமுறைக்கு உட்பட்டு, பூமியில் ஒரு ‘வளமான நாடு, அழகான வாழ்க்கை’க்கான அடித்தளத்தை அமைக்கும் என்று நாங்கள் நம்புகிறோம்.


## தமிழ்Mirrorக்கு எழுதுங்கள்

www.tamilmirror.lk

தமிழ்மிரர் வாசகர்களுக்கு வணக்கம்.
எமது பத்திரிகைக்கு உங்களுடைய ஆக்கங்கள், விமர்சனங்களை அனுப்பிவைக்கலாம்.
கருத்துகளையும் வரவேற்கின்றோம்.


அத்துடன், உங்கள் பிரதேசங்களில் இடம்பெறும் விளையாட்டு, கலை, கலாசார நிகழ்வுகளை புகைப்படங்களுடன் அனுப்பிவைக்கலாம்.

பிரதேசத்தில் நிலவும் பிரச்சினைகள் தொடர்பிலும் எழுதலாம்.




அனுப்பவேண்டிய முகவரி
தமிழ்மிரர்
ஆசிரியர் பீடம்
No 8. Hunupitiya Cross Road, Colombo 2. P.O. Box 1136

Editorial: Tel: 011 2 479 372-8, Fax: 011 2 304 114
Marketing Manager (Dir.) 011 2 479 822, 077 3421 476
Circulation Manager (Dir.) 011 2 479 672, 077 3 219 775,
Subscription Manager (Dir.) 011 2 479 626, 011 2 479 628, 077 3 502 183
E-mail: tamilmirror@wijeya.lk






## வாழ்வியல் தரிசனம்

காலப் பெருவெள்ளம் அனைவரையும் உலுக்கிவிடலாம். ஆனால், இதனுடன் மக்கள் அனைவரும் சங்கமிப்பதே இல்லை. இவற்றை வென்றுதான் உலகம் இயங்குகின்றது. தொடர்ந்து தூங்கினால் விழிப்பது எப்போது?

இயற்கை பலவழிகளில் மக்களுக்குப் புத்துணர்ச்சியை அளித்துக்கொண்டு இருக்கும். சோம்பேறிகளால் மட்டுமே சிரமப்பட முடியும்.

இயங்குபவர்களே உலகை ஆட்கொள்கின்றார்கள். தன்னையும் வளர்த்து, பூமித் தாயையும் பொறுப்பில் எடுப்பவர்களே, உண்மையான உலக மாந்தர்கள் ஆவார்கள்.

மிகவும் நலிவுற்றவர்கள், காலப்போக்கில் எங்கள் கண் முன்னே உயர்நிலையை அடைந்து விடுகின்றார்கள்.

வறுமை, பிரச்சினைகளைச் சொல்லியபடி இருக்க முடியாது. எழுவது எப்படியென அறிந்துகொண்டு, உடன் செயற்பட்டால் எல்லாப் பிரச்சினைகளும் பஸ்மமாகிவிடும். உலகம் ஒரு வீடு என்பதை மறத்தலாகாது.

பூமியை நேசிக்க வேண்டும்; இயற்கையைப் பாதுகாக்க வேண்டும்; கடமைகளை மறவாது இருக்க வேண்டும்; இன்பம் பெருகும்.

நன்றி–பருத்தியூர் பால.வயிரவநாதன்

# கோட்டாவின் ஆட்சியை கவிழ்த்தது அமெரிக்காவா?



எம்.எஸ்.எம்.ஐயூப்

இலங்கையில் பல பெரும்பான்மையினத் தேசியவாத மற்றும் இனவாத அமைப்புக்கள் அரச சார்பற்ற அமைப்புக்களைக் கடுமையாக வெறுக்கின்றன. அதேவேளை, அவை தமிழ் பிரிவினைவாதத்துக்கும் மேற்கத்திய ஏகாதிபத்தியவாதிகளுக்கும் ஆதரவாகச் செயற்படுவதாகவே அவர்கள் கருதுகின்றனர்.

அரச சார்பற்ற அமைப்புக்கள், தமிழ் ஈழ விடுதலைப் புலிகளுக்கோ அல்லது அவர்களது குறிக்கோள்களுக்கோ அல்லது பிரிவினைவாத நடவடிக்கைகளுக்கோ ஆதரவாக செயற்பட்டதற்கான ஆதாரங்கள் இல்லை. அதேபோல், அவை பெரும்பான்மையினரின் நலன்களுக்கு எதிராகச் செயற்பட்டதற்கான ஆதாரங்களும் இல்லை. எனினும், 1980களில் இருந்தே அவ்வமைப்புக்கள் விடயத்தில் பெரும்பான்மையின மக்கள் மத்தியில் இவ்வாறானதோர் அபிப்பிராயம் இருந்து வருகிறது. எனவே, தமது தேசியவாத அல்லது இனவாத நடவடிக்கைகளுக்கு எதிரானவர்களை அவர்கள் சிலவேளை எவ்வித ஆதாரமுமின்றி என்ஜிஓ (NGO) காரன் என்று பரிகாசமாக பட்டஞ்சூட்ட முற்படுகின்றனர். வெளிநாட்டுப் பணத்துக்காகவே இந்நபர்கள் தமது தேசியவாத அல்லது இனவாத கொள்கைகளை எதிர்க்கின்றனர் என்பதே அவர்களது நிலைப்பாடாகும்.

அரச சார்பற்ற அமைப்புக்கள் பிரிவினைக்கு ஆதரவாகவோ பெரும்பான்மையின மக்களுக்கு எதிராகவோ செயற்படாவிட்டாலும் அவை தமக்கு எதிரானவை என்று அவர்கள் கருதுவதற்குக் காரணங்கள் முற்றிலும் இல்லாமல் இல்லை. அவற்றில் முக்கிய காரணம் பல பிரதான அரச சார்பற்ற அமைப்புக்கள் சமாதான விரும்பிகளாகச் செயற்படுவதேயாகும்.

அத்துடன், அவ்வமைப்புக்கள் நீண்ட காலமாக நாட்டில் சமாதானத்தை வலியுறுத்தி வந்துள்ளன. இன வாதத்தை எதிர்த்து வந்துள்ளன. நல்லிணக்கம் என்பது சிங்களவர்களுக்கு எதிரானது என்றதோர் அபிப்பிராயம் 1990களில் இருந்தே சிங்கள மக்கள் மத்தியில் பரப்பப்பட்டு வந்துள்ளது. எனவே, அரச சார்பற்ற அமைப்புக்கள் என்றால் தமது நலன்களுக்கு எதிரானவை என்றதோர் கருத்து அம்மக்கள் மத்தியில் நிலவி வருகிறது.

அரச படைகளுக்கும் தமிழ் ஈழ விடுதலைப் புலிகளுக்கும் இடையிலான போர் நடைபெற்று வந்த காலத்தில் அப்போர் நடைபெற்று வந்த பிரதேசங்களில் உணவு விநியோகம் மருத்துவ வசதி போன்றவை வெகுவாக பாதிக்கப்பட்டு இருந்தது. அதேவேளை, அரச வாகனங்கள் புலிகளின் கட்டுப்பாட்டுப் பிரதேசங்களுக்குச் செல்ல தயங்கின.

எனவே, சர்வதேச செஞ்சிலுவைச் சங்கம் (ICRC) அகதிகள் தொடர்பான ஐ.நா. உயர்ஸ்தானிகர் அலுவலகம் (UNCR) போன்ற சர்வதேச நிறுவனங்களும் அவற்றின் துணையுடன் இயங்கிய தேசிய மற்றும் சர்வதேச அரச சார்பற்ற அமைப்புக்களுமே போர் நடைபெற்ற பிரதேசங்களில் வாழ்ந்த மக்களின் தேவைகளைப் பூர்த்தி செய்ய முன்வந்தன. இவ்வமைப்புக்கள் அக்காலத்தில் சந்தேகக் கண்கொண்டே பார்க்கப்பட்டன. அதுவும் பெரும்பான்மை மக்கள் அரச சார்பற்ற நிறுவனங்கள் தமக்கு எதிரானவை என்று கருதக் காரணமாகியது.

2004ஆம் ஆண்டு சுனாமி இலங்கையைத் தாக்கிய போது வடக்கு கிழக்கு மாகாணங்களில் பதிக்கப்பட்ட மக்களுக்கு நிவாரணம் வழங்கப் புலிகளால் மட்டும் முடியாது போய்விட்டது. நிவாரண பொருட்களுடன் அரச அதிகாரிகள் புலிகளின் கட்டுப்பாட்டுப் பிரதேசங்களுக்குள் நுழைவதில் பல நடைமுறை பிரச்சினைகளை இருந்தன. அப்போதும் பாதிக்கப்பட்ட அம்மக்களுக்கு நிவாரணம் வழங்குவதில் தொண்டர் நிறுவனங்களும் அரச சார்பற்ற நிறுவனங்களும் பெரும் பங்காற்றின.

உண்மையிலேயே சாதாரண பெரும்பான்மையின் மக்கள் அரச சார்பற்ற நிறுவனங்கள் தமக்கு எதிரானவை என்று சிந்திக்க வில்லை. அரசியல்வாதிகளும் ஊடகங்களுமே இந்தக் கருத்துக்களைச் சாதாரண மக்கள் மனதில் பதிய வைத்துள்ளனர்.

இந்தப் பின்னணியிலேயே இலங்கை போன்ற வெளிநாடுகளுக்கு வழங்கும் அமெரிக்க நிதி உதவிகளை இடைநிறுத்த அமெரிக்க ஜனாதிபதி டொனல்ட் ட்ரம்ப் கடந்த ஜனவரி 20ஆம் திகதி முடிவு செய்துள்ளார். இது ட்ரம்ப் இரண்டாவது முறையாக அமெரிக்க ஜனாதிபதியாக பதவியேற்ற முதல் நாளே பிறப்பித்த கட்டளைகளில் ஒன்றாகும்.

அமெரிக்க ஜனாதிபதியின் இந்த உத்தரவின் பிரகாரம் அமெரிக்காவின் பிரதான வெளிநாட்டு நிதி உதவி நிறுவனமான யூஎஸ்ஏய்ட் என்றழைக்கப்படும் சர்வதேச அபிவிருத்திக்கான அமெரிக்க உதவி நிறுவனத்தின் பணிகளும் இடைநிறுத்தப்பட்டு வெளிநாடுகளில் கடமையாற்றும் அதன் ஊழியர்களுக்கு விடுமுறை வழங்குமாறு ட்ரம்ப் பணித்திருந்தார். யூ.எஸ்.எய்ட நிறுவனத்தின் பணிகளை இடை நிறுத்தும் முடிவானது இலங்கையிலும் பல அதிர்வலைகளை உருவாக்கியுள்ளது.

ஆரம்ப கட்டமாக 90 நாட்களுக்கே இந்த நிதி உதவிகள் இடைநிறுத்தப்பட்டன. அந்த காலகட்டத்தில் இந்த உதவிகளின் தேவை மீளாய்வு செய்யப்பட்டு அவை தொடர்பாக இறுதி முடிவு எடுக்கப்படவுள்ளது.

எவ்வாறாயினும் அமெரிக்க சமஷ்டி நீதிமன்றம் ஒன்று கடந்த 14ஆம் திகதி ஜனாதிபதியின் உத்தரவைத் தற்காலிகமாக இடை நிறுத்தியுள்ளது.

இந்த விவகாரம் இலங்கையில் முக்கியத்துவம் பெறுவதற்கு மற்றுமொரு காரணமும் இருக்கிறது. தமது உத்தரவை நியாயப்படுத்தும் வகையில் ட்ரம்ப் தமது டுவிட்டர் தளத்தில் தெரிவித்திருந்த கருத்தொன்றே அதுவாகும். இலங்கை, வங்காளதேசம், யுக்ரேன், சிரியா, ஈரான், பாகிஸ்தான், இந்தியா, பிரித்தானியா மற்றும் அமெரிக்கா ஆகிய நாடுகளில் குழப்பங்கள், ஆட்சி மாற்றங்கள் மற்றும் தனி நபர்களின் நலன்கள் ஆகியவற்றுக்காக யூஎஸ்எய்ட் நிறுவனத்தின் 26 கோடி டொலர் பணம் பயன்படுத்தப்பட்டுள்ளதாக ட்ரம்ப் அந்த டுவிட்டர் குறிப்பில் குறிப்பிட்டு இருந்தார்.

ஆனால், அவர் அதற்கு அதரங்கள் எதனையும் வெளியிடவில்லை. என்னும் 2022இல் கோட்டாபய ராஜபக்‌ஷவின் ஆட்சி கவிழ்க்கப்பட்ட போது, அது வெளிநாட்டு சதியொன்றின் காரணமாகவே இடம்பெற்றதாக ஸ்ரீலங்கா பொதுஜன முன்னணியினர் கூறினர். தேசிய சுதந்திர முன்னணியின் தலைவரும் கோட்டாவின் அரசாங்கத்தில் அமைச்சராக இருந்தவருமான விமல் வீரவன்ச மேலும் ஒரு படி முன் சென்று அமெரிக்கத் தூதுவர் ஜூலி சங் கோட்டாவின் அரசாங்கத்தைக் கவிழ்ப்பதில் முக்கிய பங்காற்றியதாகக் குற்றஞ்சாட்டினார்.

அந்த ஆட்சி மாற்றத்தின்த்தின் போது கோட்டாவைப் படுகொலை செய்யத் திட்டமிடப்பட்டு இருந்ததாகவும் விமல் கூறியிருந்தார். ஆயினும், அவரது கருத்துக்களை எவரும் பெரிதுபடுத்தவில்லை. பொருட்படுத்தவுமில்லை. ட்ரம்ப்பின் டுவிட்டர் குறிப்பு வெளியான உடன் விமல் அவசரமாக ஊடகங்களை அழைத்து இலங்கையில் யூ.எஸ்.எய்ட் நிறுவனத்தின் நடவடிக்கைகளைப் பற்றி உடனடியாக விசாரணை நடத்த வேண்டும் என்று கூறினார்.

ஆண்-பெண் என்ற இரு பாலினங்களைக் குறிக்கும் மொழிப் பாவனையைப் தவிர்ப்பதைப் பற்றி இலங்கையில் ஊடகவியலாளர்களுக்குப் பயிற்சி அளிப்பதற்காக (அதாவது ஓரினச் சேர்க்கை போன்றவற்றை ஊக்குவிப்பதற்காக) யூ.எஸ்.எய்ட் நிறுவனம் 79 இலட்சம் டொலர் செலவழித்துள்ளதாகவும் அவர் கூறினார். ஆயினும், அதற்கும் அவர் ஆதாரம் எதனையும் முன்வைக்கவில்லை.

யூ.எஸ்.எய்ட் நிறுவனத்தின் இலங்கை அலுவலகத்தின் இணையத்தளத்தில் அதன் சகல நடவடிக்கைகளும் குறிப்பிடப்பட்டுள்ளன. எனினும் அரச எதிர்ப்பு நடவடிக்கைகளுக்கு உதவி வழங்குவது தொடர்பாகவோ அல்லது இரு பாலி மொழிப் பாவனையைத் தவிர்ப்பது தொடர்பாகவோ அறிகுறிகளாவது அவ்விணையத்தளத்தில் எங்கும் குறிப்பிடப்படவில்லை.

கோட்டாவின் ஆட்சி கவிழ்ப்பின் பின்னால் வெளிநாட்டுச் சதி இருந்ததாக மஹிந்த, கோட்டாபயவின் மகனும் பாராளுமன்ற உறுப்பினருமான நாமல் கூறியிருந்தார். ட்ரம்ப்பின் டுவிட்டர் குறிப்பின் பின், அவரும் இலங்கையில் யூ.எஸ். எய்ட் நிறுவனத்தின் நடவடிக்கைகளைப் பற்றி விசாரிக்க பாராளுமன்ற தெரிவுக் குழுவொன்றை நியமிக்க வேண்டும் என்று கோரி சபாநாயகர் ஜகத் விக்ரமரத்னவுக்கு கடிதம் ஒன்றை எழுதியிருந்தார்.

இந்த நிலையில், அமெரிக்கத் தூதுவர் ஜூலி சங் கடந்த 14ஆம் திகதி பத்தரமுல்லையிலுள்ள பொதுஜன முன்னணியின் தலைமை காரியாலயத்துக்குச் சென்று அக்கட்சியின் தலைவர்களைச் சந்தித்து உரையாடினார். யூ.எஸ்.எய்ட் நிறுவனத்தின் நடவடிக்கைகளைப் பற்றி கணக்காய்வொன்றை நடத்துவதாக அவர் கூறியதாகப் பின்னர் பொதுஜன முன்னணியின் பொதுச் செயலாளர் சாகர காரியவசம் கூறினார்.

இதேவேளை, இலங்கையில் யூ.எஸ்.எய்ட் நிறுவனத்தின் நடவடிக்கைகளைப் பற்றி அறிக்கையொன்றைச் சமர்ப்பிக்குமாறு அரச சார்பற்ற நிறுவனங்களுக்கான செயலகத்துக்குப் பணிப்புரை வழங்கியுள்ளதாகப் பொதுமக்கள் பாதுகாப்பு அமைச்சர் ஆனந்த விஜேபால தெரிவித்திருந்தார்.


அமெரிக்கா வெளிநாடுகளில் ஆட்சிக் கவிழ்ப்புக்காகச் சதி செய்யாத நாடல்ல. அமெரிக்க உளவு நிறுவனமான மத்திய உளவு ஸ்தாபனம் (CIA) தலையிட்டு ஆசியா, ஆபிரிக்கா மற்றும் லத்தீன் அமெரிக்க ஆகிய பிராந்தியங்களில் ஜனநாயக ரீதியாகத் தெரிவு செய்யப்பட்ட பல அரசாங்கங்கள் கவிழ்க்கப்பட்டுள்ளன. சில நாடுகளில் அமெரிக்க உதவியில் கிளர்ச்சிகள் மற்றும் சதிகள் இடம்பெற்று இரத்த ஆறுகள் ஓடியிருக்கின்றன.

அமெரிக்க உதவி இல்லாதிருந்தால் தொலைக்காட்சியில் முழு உலகமே பார்த்திருக்கையில் காசா என்ற சன நெரிசல் மிக்க சிறு பிரதேசத்தைத் தரைமட்டமாக்கி பல்லாயிரக்கணக்கான மக்களைப் படுகொலை செய்து கொடூரமான இனச் சங்காரத்தில் ஈடுபட இஸ்ரேலால் ஒருபோதும் முடியாது.

ஆயினும், சகல அமெரிக்க அபிவிருத்தி உதவித் திட்டங்களும் உள்நோக்கம் கொண்டவையல்ல. இறுதியில் அமெரிக்க நலன்களே குறிக்கோள்களாக இருந்தாலும், பல உதவித் திட்டங்கள் தீயவையல்ல. இலங்கையில் கோட்டாவின் ஆட்சி கவிழ்க்கப்பட்டதற்கும் அமெரிக்க உதவித் திட்டங்களுக்கும் இடையே தொடர்புகள் இருந்ததாகத் தெரியவில்லை. அது பொருளாதார நெருக்கடியைத் தாங்கிக்கொள்ள முடியாத மக்களின் எதிர்வினையாகும். எனவே, யூ.எஸ்.எய்ட் விவகாரத்தை அரசாங்கமும் மக்களும் திறந்த மனத்துடன் அணுக வேண்டும்.

## கடிதங்கள்

### பாலத்தால் மக்களின் உயிருக்கு ஆபத்து




பசறை தேர்தல் பிரிவில் உள்ள கல்கேகும்புரவிலிருந்து 5 கிராமங்களை இணைக்கும் ஒரே வீதியில், லொக்கல்ல ஓயாவிற்கு மேல் அமைந்துள்ள பாலம் கடுமையாகச் சேதமடைந்துள்ளதால் மக்களின் உயிருக்கு பெரும் ஆபத்து ஏற்பட்டுள்ளது.

சில நாட்களுக்கு முன்பாக, பாடசாலை மாணவி ஒருவர் உட்பட சில நபர்களும் குறித்த பாலத்திலிருந்து விழுந்து காயமடைந்து வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர். மேலும், நோயாளிகளை வைத்தியசாலைக்குக் கொண்டு செல்லும்போதும், கிராமங்களில் மரணச் சம்பவங்கள் நிகழ்ந்தால் இவ்வழியாகச் சவப்பெட்டி கொண்டு செல்லும் போதும் பாரிய சிரமத்தை எதிர்கொள்வதாக கிராம மக்கள் கூறுகின்றனர்.

இது தொடர்பில் பொறுப்பான அனைத்து துறைகளுக்கும் தகவல் வழங்கினாலும், எந்தப் பயனும் இல்லை என்றும், அரசியல்வாதிகள் ஒவ்வொரு தேர்தலிலும் அளித்த வாக்குறுதிகளை நிறைவேற்றவில்லை என்றும் அவர்கள் வலியுறுத்துகின்றனர்.

கல்கே கும்புர, வெல்கொல்ல, கல் இஹா, அலவதுகொட மற்றும் கொன்கடுவ கிராமங்களை சேர்ந்த சுமார் 400க்கும் மேற்பட்ட குடும்பங்கள் இதனால் பாதிக்கப்பட்டு வருவதாகவும் பாலத்தை புனரமைத்து, கொன்கிரீட் பாலம் அமைத்து தருமாறு கிராம மக்கள் கோரிக்கை விடுக்கின்றனர்.

- பாலித்த ஆரியவன்ச



# ஜனாதிபதிக்கு ஹர்ஷ அதிரடி பதில்

“மக்கள் கோருவதைக் கொடுக்க முடியாத அரசாங்கம் எப்படித் தான் விரும்புவதைக் கொடுக்க முடியும்?” என்று கொழும்பு மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் டாக்டர் ஹர்ஷா டி சில்வா (SJP) பாராளுமன்றத்தில் பட்ஜெட் விவாதத்தை, செவ்வாய்க்கிழமை(18) ஆரம்பித்து வைத்துப் பேசுகையில் கூறினார்.



மறுமலர்ச்சி அரசாங்கத்தின் முதல் பட்ஜெட்டை ஜனாதிபதி தாக்கல் செய்தார். ஆறு மாத பட்ஜெட்டை தாக்கல் செய்யும் போது, எனக்கும் ஒரு சிறிய வாய்ப்பு வழங்கப்பட்டது. பரவாயில்லை நண்பரே. ஜேவிபி மக்களுக்கு அளித்த வாக்குறுதிகளை நிறைவேற்ற முடியாது, எனவே நான் கேட்பதை அவர்களால் எனக்கு வழங்க முடியாது.

முதலில், அவரது தலைமையின் கீழ் மூன்று எம்.பிக்களிலிருந்து 159 எம்.பி.க்களாக வளர்ந்ததற்காக கட்சியை நான் வாழ்த்த விரும்புகிறேன். மூன்றில் இரண்டு பேர் இருப்பதால், எந்தவொரு நாட்டினரின் அரசாங்கத்தையும் ஏற்றுக்கொள்ளும் திறன் அரசாங்கத்திற்கு உள்ளது என்று ஹர்ஷா டி சில்வா கூறினார்.

ஜனாதிபதி அனுரகுமார திசாநாயக்க, பாராளுமன்றத்தில் தற்போது 2025 ஆம் ஆண்டுக்கான வரவு-செலுத் திட்டத்தை திங்கட்கிழமை (17) சமர்ப்பி த்துக்கொண்டிருக்கின்றார். அப்போது, ஐக்கிய மக்கள் சக்தியின் பாராளுமன்ற உறுப்பினர் ஹர்ஷ ஏ தோ கூறினார்.

கேள்வியெழுப்பிய ஜனாதிபதி அனுரகுமார திசாநாயக்க, என்ன ஹர்ஷ, நீங்கள் கேட்பதை நான் எப்படிக் கொடுப்பது.

உங்களுக்கு எப்படி கொழும்பு மாவட்ட அமைப்பாளர் பதவியைக் கொடுப்பது என ஜனாதிபதி கேட்டார். இதன்போது அவையில் இருந்த ஆளும் தரப்பினர் கெக் என சிரித்து விட்டனர்.

## தோட்டத்தில் இளைஞன் விவகாரம்
# “சமரசமாக முடிந்தது”

உடுகம ஹோமாதொல தோட்டத்தில் இளைஞர் ஒருவர் தாக்கப்பட்ட சம்பவத்துடன், தொடர்புடைய மூவர் கைது செய்யப்பட்டு நீதிமன்றத்தில் முன்னிலைப்படுத்தப்பட்ட போது, முறைப்பாட்டாளர் தரப்பினர் சார்பில் முன்னிலையான சட்டத்தரணி, கைது செய்யப்பட்ட மூவரை குறைந்தபட்சம் விளக்கமறியலில் வைக்குமாறு கூட நீதிமன்றத்தில் வலியுறுத்தாது இரு தரப்பினரும் நீதிமன்றத்திலேயே சமரசமாகியுள்ளனர் என பொதுமக்கள் பாதுகாப்பு அமைச்சர் ஆனந்த விஜேபால தெரிவித்தார்.

பாராளுமன்றத்தில் திங்கட்கிழமை (17) இடம்பெற்ற உள்ளூராட்சி அதிகார சபைகள் (விசேட ஏற்பாடுகள்) சட்டமூலம் மீதான இரண்டாம் வாசிப்பு மீதான விவாதத்தில் மனோ கணேசன் எம்.பி. முன்வைத்த கோரிக்கை தொடர்பில் பதிலளிக்கையிலேயே இவ்வாறு தெரிவித்த அவர், மேலும் பேசுகையில், குறிப்பிட்ட விடயத்தை தற்போது ஆராய்ந்து பார்த்தேன். அவ்வாறான சம்பவம் 2025.02.05 ஆம் திகதி இடம்பெற்றுள்ளது. பாதிக்கப்பட்ட தரப்பினர் 2025.02.13 ஆம் திகதி பொலிஸில் முறைப்பாடு செய்துள்ளனர். இந்த முறைப்பாட்டுக்கமைய ஒரே குடும்பத்தைச் சேர்ந்த மூவர் கைது செய்யப்பட்டனர். நீதிமன்றத்துக்கு அறிக்கை சமர்ப்பிக்கப் பட்டது. நீதி மன்றத்தில் வைத்து இவ்விரு தரப்பினரும் சமரசமாகியுள்ளனர். முறைப்பாடளித்த தரப்பில் முன்னிலையான சட்டத்தரணி குறைந்தபட்சம் கைது செய்யப்பட்டவர்களை தடுப்புக்காவலில் வைக்குமாறும் கூட நீதிமன்றத்தில் கோரிக்கை விடுக்கவில்லை என்றார்.



# “பிரதமர் மறந்து விட்டாரோ”

வரவு -செலவுத் திட்டத்தில் வடக்கு மாகாணத்தின் சுகாதாரத்துறைக்கு எந்த முன்மொழிவுகளும் இல்லை. வடக்கு மீனவர்கள் சம்பந்தமாக எதுவுமே கதைக்கப்படவில்லை. பலாலி விமான நிலையம் தொடர்பாகவும் எதுவும் இல்லை என்று தெரிவித்த யாழ் மாவட்ட எம். பியுமான இ.அர்ச்சுனா, பாராளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்பட்ட வரவு - செலவுத் திட்டத்தை வடக்கிற்கான வரவு-செலவுத் திட்டமாகப் பார்த்து எதிர்க்கட்சியிலிருந்து சந்தோஷப்படக்கூடிய ஒரேயொரு மனிதன் நானாகத்தான் இருப்பேன் எனவும் கூறினார்

பாராளுமன்றத்தில் திங்கட்கிழமை (17) நடைபெற்ற உள்ளூராட்சி அதிகார சபைகள் (விசேட ஏற்பாடுகள்) சட்டமூலம் மீதான இரண்டாம் வாசிப்பு மீதான விவாதத்தில் உரையாற்றுகையிலேயே இவ்வாறு தெரிவித்த அவர் மேலும் பேசுகையில்,

இன்றையதினம் பாராளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்பட்ட வரவு-செலவுத் திட்டத்தை யாழில் பிறந்த சாதாரண மனிதர்களுக்குக் கிடைக்க வேண்டிய அடிப்படை விடயங்களை எங்களுடைய ஜனாதிபதி தந்திருக்கின்றார் என்பதில் எதிர்க்கட்சியிலிருந்து சந்தோஷப்படக்கூடிய ஒரேயொரு மனிதன் நானாகத்தான் இருப்பேன். என்னைப் பொறுத்தவரையில் எனக்கு அரசியல் தேவையில்லை. நான் அரசியலுக்காக அரசியல் செய்ய வரவில்லை. வடக்கிற்கான வரவு-செலவுத் திட்டமாகவே இதனை நான் கருதுகின்றேன். எனவே, உங்களுக்கு எனது நன்றிகளைத் தெரிவிக்கின்றேன்.

இந்த வரவு-செலவுத் திட்டத்தில் வடக்கு மாகாணத்தின் சுகாதாரத்துறைக்கு எந்த முன்மொழிவுகளும் இல்லை. யாழ்ப்பாணத்தில் உள்ள வைத்தியர்கள் தொடர்பில் வரவு- செலவித் திட்டத்தில் கவனம் செலுத்தியிருந்தால் நன்றாக இருக்கும். அதனை நாம் ஆறுதலாக விவாதிப்போம். கோம்பயன் மயானத்திற்கு அருகில் மருத்துவக் கழிவுகள் எரியூட்டப்படுகின்றன. இது தொடர்பில் சுகாதார அமைச்சர் கவனம் செலுத்த வேண்டும்.

இந்த முறை வரவு-செலவுத் திட்டத்தில் மீனவர்கள் சம்பந்தமாக எதுவுமே கதைக்கப்படவில்லை. மீன்பிடி அமைச்சர் அதனைக் கருத்தில் கொள்வார் என்று நினைக்கின்றேன்.

பலாலி விமான நிலையம் தொடர்பாகவும் கதைக்கப்பட வில்லை. பலாலிவிமான நிலத்தைச் சர்வதேச விமான நிலையமாகக் கொண்டுவந்து எமது வடக்கிற்கு அபிவிருத்தியைக் கொண்டுவருமாறு கோருகின்றேன்.

பிரதமர் ஹரிணி அமரசூரிய நான் கற்ற யாழ். இந்துக் கல்லூரிக்கு வந்திருந்தார். அவரை வரவேற்பதில் சந்தோஷம். ஆனால், எந்தப் பாடசாலை விழாக்களுக்கும் விடயங்களுக்கும் ஒரு அரசியல்வாதியை அழைத்து அந்தப்பாடசாலைக்கு அரசியல் சாயம் பூசக்கூடாது என்று பிரதமர் செப்டம்பர் மாதம் சொல்லியிருந்தார் தற்போது தான் முன்னர் கூறியதை மறந்து விட்டாரோ தெரியவில்லை என்றார்.

## மலையக தமிழர்களுக்கு
# மனோ வரவேற்பு

மலையக தமிழர்கள் என்ற பெயர் அடையாளத்தை அரசாங்கம் ஏற்றுக்கொண்டுள்ளதை வரவேற்பதாகத் தமிழ் முற்போக்குக் கூட்டணி தலைவரும் எம்.பியுமான மனோ கணேசன் தெரிவித்துள்ளார்.

2025ஆம் ஆண்டுக்கான வரவு செலவுத் திட்டத்தை ஜனாதிபதி முன்வைத்த பின்னர் ஊடகங்களுக்குக் கருத்து தெரிவிக்கையிலேயே மனோ கணேசன் இவ்வாறு கூறினார்.

அதன்போது அவர் மேலும் கூறுகையில்

கடந்த காலங்களில் ஜேவிபி கட்சி அபிவிருத்திகளுக்குத் தடையாக இருந்தது. ஆனால் அவர்கள் இன்று சந்தை பொருளாதாரத்தை ஏற்றுக்கொண்டுள்ளனர். அத்துடன் நாங்கள் பிரதிநிதித்துவப்படுத்தும் மலைய மக்கள் தொடர்பாக ஒன்றைக் கூற வேண்டும். மலையக தமிழர்கள் என்ற பெயர் அடையாளத்தை ஏற்றுக் கொண்டுள்ளனர். அதனைக் கூறும் போது நான் எழுந்து நன்றி தெரிவித்தேன். தோட்டத் தொழிலாளர்களுக்கு 1,700 ரூபாய் சம்பளம் தொடர்பிலும் கூறினர். ஆனால் அதற்கு முன்னாள் கூறிய தனியார்த் துறையினர் சம்மேளனம் ஏற்றுக்கொண்டது என்றும் எனினும் தோட்டத் தொழிலாளர்களைப் பொறுத்தவரையில் ஏற்றுக்கொள்ளவில்லை என்றும் கூறியிருந்தார்.

தயவு செய்து அமைச்சரை அனுப்பி அழைத்துப் பேசி ஏற்றுக்கொள்ளச் செய்யுமாறு கோரினோம்.

இதேவேளை, 10 ஆயிரம் வீட்டுத் திட்டத்தை நாங்களே பெற்றுக்கொண்டோம்.

அத்துடன், ஸ்மார்ட் கிளாஸ் விடயத்திலும் கூறினர். அதற்கான பெயர்கள் எங்களுக்குரியது என்றாலும் நீங்கள் செய்யுங்கள்.

ஆனால் காணிப் பிரச்சினை தோட்டத் தொழிலாளர்களுக்கு நியாயமான தீர்வு கிடைக்கவில்லை. இன்னும் ஒருவருடம் உள்ளது. பொறுத்திருந்து பார்ப்போம் என்றார்.



# “வேட்மனு கோரக்கூடாது”

வரவு- செலவுத் திட்ட விவாதம் நிறைவடையும் வரையில் உள்ளூராட்சித் தேர்தலுக்கான வேட்பு மனுக்களைக் கோரக் கூடாது என்று தமிழ்த் தேசிய மக்கள் முன்னணி பாராளுமன்ற உறுப்பினர் கஜேந்திரகுமார் பொன்னம்பலம் தெரிவித்துள்ளார்.

பாராளுமன்றத்தில் திங்கட்கிழமை (17) நடைபெற்ற உள்ளூராட்சித் தேர்தல் திருத்தச் சட்டமூலம் தொடர்பான விவாதத்தில் உரையாற்றும் போதே அவர் இவ்வாறு கூறினார்.

மேலும் அவர் கூறுகையில்,

இந்த சட்டமூலம் நிறைவேற்றப்பட்ட பின்னர் தேர்தலுக்கான நடவடிக்கைகளை ஆரம்பிக்க வேண்டும். இதன்படி, நானொரு கட்சியின் செயலாளர் என்ற வகையில் வேட்பு மனுக்களைக் கோரிய பின்னர் இந்த பாராளுமன்றத்திற்கு வர முடியாமல் இருக்கும், தேர்தல் பிரசார நடவடிக்கைகளில் ஈடுபட வேண்டியிருக்கும். இதனால் வரவு- செலவுத் திட்ட விவாதத்தில் உரையாற்ற முடியாது போகும். ஆகவே வரவு செலவுத் திட்ட விவாதம் நிறைவடையும் வரையில் நியமனப் பத்திரங்களைக் கோர வேண்டாம். அவ்வாறு கோரினால் நான் பல்வேறு நெருக்கடிகளைச் சந்திக்க நேரிடும். பாராளுமன்ற நடவடிக்கைகளில் ஈடுபட முடியாமல் இருக்கும். இந்த வரவு செலவுத் திட்டம் முக்கியமானது. இதற்காக நேரம் வேண்டும். இதனால் வரவு- செலவுத் திட்டம் நிறைவடைய முடியும் முன்னர் வேட்பு மனுக்களைக் கோருவது எனது சிறப்புரிமையைப் பாதிக்கும். உயர்நீதி மன்றம் முடிந்தளவு விரைவில் தேர்தலை நடத்தமாறே கோரியுள்ளது. நியாய மான திகதியை நிர்ணயிக்க முடியும்.



# “விரைவாக தேர்தல் நடத்த வேண்டும்”

தேர்தலை பிற்போடும் பாவச் செயலுக்கு மக்கள் விடுதலை முன்னணியும் கடந்த காலங்களில் ஒத்துழைப்பு வழங்கியுள்ளது. உள்ளூராட்சி மன்றத் தேர்தலை விரைவாக நடத்த வேண்டும் என்ற நிலைப்பாட்டில் நாங்களும் உள்ளோம்.இருப்பினும் தேர்தல் நடவடிக்கைகள் சாதாரண தரப் பரீட்சைக்கு இடையூறாக அமையக் கூடாது என ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுனவின் பாராளுமன்ற உறுப்பினர் நாமல் ராஜபக்ஷ தெரிவித்தார்.

பாராளுமன்றத்தில் திங்கட்கிழமை (17) நடைபெற்ற உள்ளூராட்சி அதிகார சபைகள் (விசேட ஏற்பாடுகள்) சட்டமூலம் மீதான இரண்டாம் வாசிப்பு மீதான விவாதத்தில் உரையாற்றுகையில் மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

அவர் மேலும் உரையாற்றியதாவது,

நல்லாட்சி அரசாங்கம் உள்ளூராட்சி மன்றத் தேர்தலை பிற்போடுவதற்கு நடவடிக்கை எடுத்த போது, மக்கள் விடுதலை முன்னணியினர் முழுமையாக ஒத்துழைப்பு வழங்கினார்கள். அதனை ஆளும் தரப்பினர் அறியமாட்டார்கள். ஆகவே, தேர்தலை பிற்போடும் பாவச்செயலுக்கு மக்கள் விடுதலை முன்னணியும் ஒத்துழைப்பு வழங்கியுள்ளது. இந்த பாவச்செயலில் நாங்களும் எமது கட்சியும் ஒருபோதும் ஆதரவளிக்கவில்லை. சுதந்திரமானதும், நீதியானதுமான முறையில் தேர்தலை நடத்த வேண்டும். தேர்தலை பிற்போடாமல் நடத்த வேண்டும் என்பதை அரசாங்கத்திடம் வலியுறுத்துகிறோம். இருப்பினும், எதிர்வரும் மாதம் 4 முதல் 5 இலட்சம் வரையிலான மாணவர்கள் சாதாரண தரப் பரீட்சைக்குத் தோற்றுகிறார்கள். 80 ஆயிரம் பேர் தேர்தலில் போட்டியிடுவார்கள். ஆகவே, பரீட்சைக்கு மத்தியில் தேர்தல் செயற்பாடுகளை முன்னெடுப்பது பரீட்சைக்குத் தோற்றும் மாணவர்களுக்கு ஏதாவதொரு வழியில் பாதிப்பை ”ஏற்படுத்தும்.

ஆகவே, பரீட்சை குறித்து அரசாங்கம் விசேட கவனம் செலுத்த வேண்டும் என்றார்.



பங்களாதேஷ்

பங்களாதேஷுக்கு

# “மீண்டும் வருவேன்”

நான் பங்களாதேஷுக்கு மீண்டும் வருவேன் என தெரிவித்த பங்களாதேஷின் முன்னாள் பிரதமர் ஷேக் ஹசீனா, பாதிக்கப்பட்ட அனைவருக்கும் நீதி கிடைப்பதை உறுதி செய்வேன் எனவும் சவால் விடுத்துள்ளார்.

பங்களாதேஷில், கடந்த ஆண்டு, மாணவர்கள் போராட்டம் காரணமாகப் பிரதமர் பதவியை இராஜினாமா செய்த ஷேக் ஹசீனா, இந்தியாவில் தஞ்சம் புகுந்துள்ளார். இந்தியாவில் தங்கியுள்ள ஷேக் ஹசீனாவை நாடு கடத்த வேண்டும் என பங்களாதேஷ் அரசு கோரிக்கை விடுத்து இருந்தது.



எனினும் இது தொடர்பாக இந்தியா எந்த ஒரு கருத்தையும் தெரிவிக்கவில்லை. பங்களாதேஷில் ஷேக் ஹசீனாவின் கட்சி சார்ந்த நிகழ்ச்சிகளில் காணொலி வாயிலாக அவர் பங்கேற்று வருகிறார். இந்த நிலையில், பங்களாதேஷில் நடைபெற்ற நிகழ்ச்சியில் ஷேக் ஹசீனா உரையாற்றிய போதே மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அங்கு அவர் தொடர்ந்து உரையாற்றுகையில்,

“நான் திரும்பி வருவேன். அதனால் தான் அல்லா என்னை உயிருடன் வைத்து இருக்கிறார். பாதிக்கப்பட்டவர்களின் குடும்பங்களுக்கு உரிய நீதி கிடைப்பதை உறுதி செய்வேன். பாதிக்கப்பட்ட ஒவ்வொருவரின் குடும்பத்திற்கும் நான் உதவி செய்வேன்.

“போராட்டத்தின் போது மக்களைக் கொன்றவர்களைச் சட்டத்தின் முன் நிறுத்தி தண்டனை பெறுவதை உறுதி செய்வேன். முகமது யூனுஸ் ஆட்சி செய்யத் தகுதியற்றவர். கொல்லப்பட்டவர்களின் குடும்பங்களுக்கு யூனுஸின் ஆட்சியின் கீழ் நீதி கிடைக்காது” என்றார்.

கனடா




## விமான விபத்தில் 19 பேர் காயம்

கனடாவின் டொராண்டோ பியர்சன் சர்வதேச விமான நிலையத்தில் விமானம் ஒன்று விபத்துக்குள்ளானதில், 19 பேர் காயமடைந்துள்ளனர்.

விமானம் தரையிறங்கும் போது, இந்த விபத்து நிகழ்ந்ததாக, அந்நாட்டு ஊடகங்களில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதுதொடர்பாக விமானநிலையம் தனது எக்ஸ் வலைத்தளத்தில் கூறியிருப்பதாவது, “எண்டெவர் ஏர் நிறுவனத்தால் இயக்கப்படும் CRJ900 விமானம், திங்கட்கிழமை (17) பிற்பகல் 3:30 மணியளவில், டொராண்டோ பியர்சன் சர்வதேச விமான நிலையத்தில் தரையிறங்கிய போது விபத்தில் சிக்கியுள்ளது.

“விமானத்தில் மொத்தம் 80 பேர் இருந்துள்ளனர். முதற்கட்ட தகவலின்படி, உயிரிழப்புகள் ஏதும் ஏற்படவில்லை. விபத்தில் காயமடைந்தவர்கள் அருகிலுள்ள வைத்தியசாலைகளுக்குக் கொண்டு செல்லப்பட்டனர்” என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

இத்தாலி

போப் பிரான்சிஸ் சுவாச குழாயில்

## பல வகையான தொற்று பாதிப்பு



கத்தோலிக்க திருச்சபையின் தலைவர் போப் பிரான்சிஸ் சுவாசக் குழாயில் பாக்டீரியா, பூஞ்சை மற்றும் ஒட்டுண்ணிகள் என பல வகையான தொற்று பாதிப்பு ஏற்பட்டுள்ளதாக வாடிகன் செய்தி தொடர்பாளர் மேத்யூ புரூனி தெரிவித்துள்ளார்.

இதுபற்றி வாடிகன் செய்தி தொடர்பாளர் மேத்யூ புரூனி மேலும் கூறுகையில்,

“போப் பிரான்சிஸ் (வயது 88) கடந்த வாரம் உடல்நலம் பாதிக்கப்பட்டு ரோம் நகரில் உள்ள வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

வைரசுகள், பாக்டீரியா, பூஞ்சை மற்றும் ஒட்டுண்ணிகள் என பல வகையான தொற்று பாதிப்புகளால் போப் அவதிப்பட்டு வருகிறார். சமீப காலங்களாக அவருக்கு மேற்கொள்ளப்பட்ட மற்றும் திங்கட்கிழமை (17) நடந்த பரிசோதனை முடிவில், அவருக்குச் சுவாசக் குழாயில் கலவையான தொற்று ஏற்பட்டு இருக்கிறது என உறுதியாகியுள்ளது.

> “ மார்ச் 5ஆம் திகதி சாம்பல் புதன் வரை அவர் எந்த நிகழ்ச்சிகளிலும் பங்கேற்கமாட்டார்

அவருக்கு தொடர்ந்து சிகிச்சை அளிக்க வேண்டிய தேவை ஏற்பட்டு உள்ளது என கூறியுள்ளார். இதற்கு முன்பு, கடந்த 2023ஆம் ஆண்டு நிம்மோனியா பாதிப்புக்காக போப் சிகிச்சைக்காகச் சேர்க்கப்பட்டுள்ளார்.

எனினும், போப், பத்திரிகை வாசிப்பது உள்பட சில அன்றாட பணிகளைச் செய்து வருகிறார். அவருடைய நிலைமை சீராக உள்ளது” என்று புரூனி கூறியுள்ளார்.

எனினும், மார்ச் 5ஆம் திகதி சாம்பல் புதன் வரை அவர் எந்த நிகழ்ச்சிகளிலும் பங்கேற்கமாட்டார் என தெரிவிக்கப்படுகின்றது.

புதுடெல்லி



புதிய முதல்வரின்

## பதவியேற்பு விழா நாளை

> “ துணைநிலை ஆளுநர் புதிய முதல்வருக்கு பதவி ஏற்பு செய்து வைக்கவுள்ளார். இவருடன் புதிய அமைச்சர்களும் இதே மேடையில் பதவி ஏற்கவுள்ளனர்

டெல்லி முதல்வர் பதவி ஏற்பு விழா, வியாழக்கிழமை (20), டெல்லியின் ராம்லீலா மைதானத்தில் பிற்பகல் 4 மணிக்கு நடைபெறவுள்ளது.

இதற்காக 3 மேடைகளுடன் பிரமாண்டமான ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன.


இதில், பிரதமர் நரேந்திர மோடி, பாஜக ஆளும் மாநில முதல்வர்கள், திரை நட்சத்திரங்களுடன் முக்கியத் துறவிகளும் கலந்துகொள்ளவுள்ளனர்.

துணைநிலை ஆளுநர் புதிய முதல்வருக்கு பதவி ஏற்பு செய்து வைக்கவுள்ளார். இவருடன் புதிய அமைச்சர்களும் இதே மேடையில் பதவி ஏற்கவுள்ளனர்.

கர்நாடகா

15 வயது சிறுவன் சுட்டதில்

## 4 வயது சிறுவன் பலி; தாய் படுகாயம்



கர்நாடகாவில் 15 வயது சிறுவன் ஒருவன், துப்பாக்கியால் சுட்டதில் 4 வயது சிறுவன் உயிரிழந்துள்ளதுடன், உயிரிழந்த சிறுவனின் தாய் வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

கர்நாடக மாநிலம், மண்டியா பகுதி அருகேயுள்ள நாகமங்களாவில் மஞ்சுநாத் என்பவர் கோழிப்பண்ணை நடத்தி வருகிறார். அவரது பண்ணையில் வைக்கப்பட்டிருந்த துப்பாக்கியை, ஞாயிற்றுக்கிழமை (16) மாலை 6 மணியளவில் 15 வயது சிறுவன் எடுத்து விளையாடியதாகத் தெரிகிறது. அப்போது தவறுதலாகச் சுட்டதில் 4 வயது சிறுவன் உயிரிழந்தான்.

அத்துடன், அந்த சிறுவனின் 29 வயது தாயாருக்குக் காலில் காயம் ஏற்பட்டது. இதையடுத்து, இது குறித்து நாகமங்களா பொலிஸார் 15 வயது சிறுவன் மீதும், துப்பாக்கியின் உரிமையாளர் மீதும் வழக்குப் பதிவு செய்துள்ளனர். இருவரையும் கைது செய்து விசாரணை நடத்தி வருகின்றனர்.

உயிரிழந்த சிறுவன் மேற்கு வங்க மாநிலத்தைச் சேர்ந்த தொழிலாளி ஒருவரின் பிள்ளை ஆகும். துப்பாக்கியால் சுட்ட 15 வயது சிறுவனும் மேற்கு வங்கத்தைச் சேர்ந்தவன் என விசாரணையில் தெரியவந்துள்ளது.

# இன்று ஆரம்பிக்கிறது சம்பியன்ஸ் கிண்ணத் தொடர்




சர்வதேச கிரிக்கெட் சபையின் சம்பியன்ஸ் கிண்ணத் தொடரானது கராச்சியில் இன்று பிற்பகல் 2.30 மணிக்கு நடைபெறவுள்ள பாகிஸ்தான், நியூசிலாந்து அணிகளுக்கிடையிலான குழு ஏ போட்டியுடன் ஆரம்பிக்கின்றது.

முதல் எட்டு நிலை அணிகள் பங்கேற்கும் இத்தொடரின் குழு ஏயின் பாகிஸ்தான், நியூசிலாந்து தவிர இந்தியா, பங்களாதேஷ் ஆகியனவும் குழு பியில் அவுஸ்திரேலியா, தென்னாபிரிக்கா, ஆப்கானிஸ்தான், இங்கிலாந்து ஆகியன காணப்படுகின்றன.

ஒவ்வொரு குழுவிலும் ஒவ்வொரு அணியும் மற்றைய அணியுடன் ஒவ்வொரு போட்டியில் விளையாடி முடிவில் குழுவில் முதலிரண்டு இடங்களைப் பிடிக்கும் அணிகள் அரையிறுதிப் போட்டிக்கு முன்னேறும்.

இந்தியாவின் போட்டிகள் ஐக்கிய அரபு அமீரகத்தின் டுபாயிலும், ஏனைய போட்டிகள் பாகிஸ்தானில் நடைபெறவுள்ளன.

ஒருபோதுமில்லாதளவுக்கு குறிப்பிட்டு ஒரு அணிக்கு வாய்ப்புகள் அதிகமாக உண்டு என்று சொல்ல முடியாத தொடராக இத்தொடர் காணப்படுகின்றது.

இந்தியாவில் ஜஸ்பிரிட் பும்ரா இல்லாததோடு, மொஹமட் ஷமி இப்போதுதான் அணிக்குத் திரும்பியுள்ளார். அவுஸ்திரேலியாவில் மிற்செல் ஸ்டார்க், ஜொஷ் ஹேசில்வூட், அணித்தலைவர் பற் கமின்ஸ், மிற்செல் மார்ஷ், மார்க்கஸ் ஸ்டொய்னிஸ் ஆகியோர் இல்லை. பாகிஸ்தானின் பந்துவீச்சு மற்றும் பின் மத்தியவரிசை சோடை போயுள்ளது.

இங்கிலாந்து போர்ம் அவுட்டில் உள்ளது. தென்னாபிரிக்காவின் பெறுபேறுகளும் அண்மைக்காலமாக ஒருநாள் சர்வதேசப் போட்டிகளில் மோசமானதாகக் காணப்படுகிறது.

ஆப்கானிஸ்தானின் மத்திய வரிசை சொல்லிக் கொள்ளும்படி இல்லாததுடன், பங்களாதேஷின் சுழற்பந்துவீச்சு பின்தங்கியுள்ளது. இருப்பதில் நியூசிலாந்தே அதிக வாய்ப்புள்ள அணியாகக் காணப்படுகிறது.

## ஒப்பந்தத்தை முடிக்க விரும்பும் கஸேமீரோ

இங்கிலாந்து பிறீமியர் லீக் கால்பந்தாட்டக் கழகமான மன்செஸ்டர் யுனைட்டெட்டின் மத்தியகளவீரரான கஸேமீரோ, தனது ஒப்பந்தம் 2026ஆம் ஆண்டு முடிவடையும் வரையில் கழகத்தில் இருக்க விரும்புவதாக தெரிவித்துள்ளார்.

நடப்புப் பருவகாலத்தில் யுனைட்டெட் தடுமாறுவதுடன், தனதிடத்தையும் கஸேமீரோ இழந்துள்ளமை குறிப்பிடத்தக்கது.

2022ஆம் ஆண்டு ஸ்பானிய லா லிகா கழகமான றியல் மட்ரிட்டிலிருந்து யுனைட்டெட்டில் கஸேமீரோ இணைந்திருந்தார்.



## மகனுடன் ஆப்கானிஸ்தானுக்காக விளையாட விரும்பும் நபி

சர்வதேச கிரிக்கெட் சபையின் சம்பியன்ஸ் கிண்ணத் தொடருடன் முன்னர் திட்டமிட்டபடி ஒருநாள் சர்வதேசப் போட்டிகளிலிருந்து ஆப்கானிஸ்தானின் முன்னாள் அணித்தலைவர் மொஹமட் நபி ஓய்வு பெறமாட்டார் எனத் தெரிவதோடு, தனது மகன் ஹஸன் ஐஸகில்லுடன் சர்வதேச கிரிக்கெட்டை விளையாடும் நம்பிக்கையைக் கொண்டுள்ளார்.

சம்பியன்ஸ் கிண்ணத் தொடர் முடிவில் ஒருநாள் சர்வதேசப் போட்டிகளிலிருந்து ஓய்வு பெறுவதாக கடந்தாண்டு நொவெம்பரில் 40 வயதான நபி தெரிவித்திருந்தபோதும் தற்போது எதிர்காலம் குறித்து இன்னும் யோசிப்பதாகக் கூறியுள்ளார்.

இப்போ ட்டிகள் தனது கடைசி ஒருநாள் சர்வதேசப் போட்டிகளாக இருக்காதெனத் தெரிவித்த நபி, தான் குறைவாக ஒருநாள் சர்வதேசப் போட்டிகளில் விளையாடி, இளைஞர்களுக்கு அனுபவத்தை கட்டமைக்க வாய்ப்புகளை வழங்கப் போவதாகவும், சிரேஷ்ட வீரர்களுடன் கலந்துரையாடியுள்ளதாகவும் உயர் மட்டப் போட்டிகளில் தனது உடற்றகுதியைப் பொறுத்து விளையாடலாம் அல்லது விளையாடாமல் விடலாம் பார்ப்போம் எனக் குறிப்பிட்டுள்ளார்.

நபியின் 18 வயதான மகனான துடுப்பாட்டவீரரான ஐஸகில் 2024ஆம் ஆண்டு 19 வயதுக்குட்பட்டோருக்கான உலகக் கிண்ணத் தொடரில் ஆப்கானிஸ்தானைப் பிரதிநிதித்துவப்படுத்தியிருந்தார்.




## ‘நீண்ட ஒப்பந்தத்தில் நெய்மர் கைச்சாத்திட விரும்புகிறார்’

நடப்புப் பருவகாலத்தைத் தாண்டி பிரேஸிலியக் கால்பந்தாட்டக் கழகமான சன்டோஸில் முன்களவீரரான நெய்மர் தொடர விரும்புவதாக அவரது தந்தையும் முகவருமான நெய்மர் டா சில்வா சன்டோஸ் சீனியர் தெரிவித்துள்ளார்.

கடந்த ஜனவரி 31ஆம் திகதி சன்டோஸில் இணைந்த 33 வயதான நெய்மர், எதிர்வரும் ஜூன் மாதம் வரையில் ஒப்பந்தமொன்றைக் கைச்சாத்திட்டுள்ளார்.

இதுவரையில் சன்டோஸுக்காக ஒரு முழுப் போட்டியையும் ஆடியிருக்காத நெய்மர், எதிர்காலத்தை விட நிகழ்காலம் குறித்து சிந்திப்பதாகக் கூறியுள்ளார்.

இதேவேளை, 2026ஆம் ஆண்டு உலகக் கிண்ணத் தொடர் வரையாவது கழகத்தில் நெய்மர் இருப்பாரென நம்புவதாக சன்டோஸின் தலைவர் மார்செலோ டெய்ஸ்கெய்ரா தெரிவித்துள்ளார்.





## சிற்றி செல்லும் றிட்ஸ்?

ஜேர்மனிய புண்டெலிஸ்கா கால்பந்தாட்டக் கழகமான பயெர் லெவர்குசனின் மத்தியகளவீரரான புளோரியன் றிட்ஸைக் கைச்சாத்திடுவதில் இங்கிலாந்து பிறீமியர் லீக் கழகமான மன்செஸ்டர் சிற்றி ஆர்வம் காட்டுவதாகத் தெரிவிக்கப்படுகிறது.

எதிர்வரும் 2027ஆம் ஆண்டு வரை ஒப்பந்தத்தைக் கொண்டுள்ள 21 வயதான றிட்ஸைக் கைச்சாத்திடுவதற்கு 85 மில்லியன் ஸ்டேர்லிங் பவுண்ஸ்கள் தேவை என நம்பப்படுகிறது.

தமது மத்தியகளவீரரான கெவின் டி ப்ரூனே இல்லாத எதிர்காலத்தில் றிட்ஸை அவர் மூலம் பிரதியிட சிற்றி விரும்புகின்றது.

ஸ்பானிய லா லிகா கழகமான றியல் மட்ரிட்டுக்குச் செல்ல றிட்ஸ் விரும்புகையில் மட்ரிட்டுடன் சிற்றி போட்டியிடுமெனத் தெரிகிறது.

விஜய நியூஸ்பேப்பர்ஸ் லிமிட்டெட்டினால் புதன்கிழமை 19, பெப்ரவரி 2025, இல. 08, ஹுணுபிட்டிய குறுக்கு வீதி, கொழும்பு - 02 இல் வடிவமைக்கப்பட்டு, இந்த மின்னிதழ் வெளியிடப்பட்டது.